
பக்கங்கள் 31

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 23 ஞாயிற்றுக்கிழமை 08.09.2024 | அதிர்வு 37

## ரணிலும் அநுரவும் ஒரே கூட்டு உறவு!

### அவர்களுக்கு வாக்களிப்பது வீண்விரயம் என்கிறார் சஜித்



ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சுயேச்சை வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும்

04▸






# தேர்தலில் ரணில் வெல்ல வேண்டும்

## தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை ஜனாதிபதியிடமே நேரில் தெரிவிப்பு

(ந.லோகதயாளன்)

“இந்த ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெல்ல வேண்டும். வென்று தமிழர்களின் தீர்க்கப்படாத இனப் பிரச்சினைக்கு தீர்வு காணுவது முக்கியம்.”

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேற்று முன்னிரவு நேரில் சந்தித்த போது தெரிவித்திருக்கிறார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின்தலைவர்மாவை சேனாதிராஜாவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று மாலை யாழ்ப்பாணம் தெல்லிப்பளையில் உள்ள மாவை சேனாதிராஜாவின் இல்லத்தில் இடம் பெற்றுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க , இரண்டு தேர்தல் பிரசாங்களில் பங்கேற்பதாக நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த வேளையில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இல்லத்திற்கு வருகை தந்த ஜனாதிபதியை மாவை சேனாதிராஜா, இந்து சமய முறைப்படி வரவேற்றார்.

08▸



## வடக்கு மக்களை அச்சுறுத்திய அநுர மன்னிப்பு கோர வேண்டும்

- மாகாண சபைகளுக்கு அபிவிருத்திக்கான அதிகாரம் வழங்கப்படும். மாகாண அபிவிருத்தி விசேட நிறுவனங்கள் ஆரம்பிக்கப்படும்.
- விவசாயத்துறையை நவீனமயப்படுத்தி வடக்கு விவசாயத்துக்கு முன்னுரிமையளிக்கப்படும்.
- காங்கேசன்துறை, பூநகரி, மாங்குளம் ஆகிய விசேட வர்த்தக வலயங்கள் ஆரம்பிக்கப்படும்.
- வடக்கில் டிஜிட்டல் மத்திய நிலையம் ஆரம்பிக்கப்படும்.

வாக்குகளைப் பெறுவதற்காக வடக்கு மக்களை அச்சுறுத்திய அநுரகுமார திஸாநாயக்க அந்த மக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

05▸




இந்த ஜனாதிபதி தேர்தலையொட்டி இலங்கைத் தமிழரசுக் கட்சி படும்பாடு சந்தி சிரிப்பதாக இருக்கின்றது. அதுவும் கட்சித் தலைவர் மாவையின் திருக்கூத்து சொல்லி மாளாதது. சணம் பித்தம், சணம் வாதம் என்ற நிலைமைதான்.

நடைபெற்று முடிந்த கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்க முடிவு கட்டப்பட்டமையை அடுத்து, மாவை சேனாதிராஜா விழுந்தடித்துக் கூறிய கருத்தும், அடுத்த நாள் அவர் அடித்த பல்டியும் சொல்லி மாளாதவை.

07▸




# வரிசை யுகம் வேண்டுமா? நல்ல எதிர்காலம் வேண்டுமா?

## செப். 21 இல் மக்கள் தீர்மானிக்க வேண்டும் என்று உடுப்பிட்டி பரப்புரைக் கூட்டத்தில் ரணில் தெரிவிப்பு








“இரண்டு வருடங்களுக்கு முன்னர் குடும்பமாக ஒவ்வொரு வரிசைகளில் நின்றோம். ரூபா பெறுமதி வீழ்ச்சி கண்டது. வியாபாரங்கள் மூட்டப்பட்டு தொழில்களை இழக்க நேரிட்டது. மக்கள் கஷ்டங்களை மறந்திருக்க வாய்ப்பில்லை. மீண்டும் அந்த யுகம் வேண்டுமா? நல்ல எதிர்காலம் வேண்டுமா? என்பதை எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தீர்மானிக்க வேண்டும்.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

யாழ். உடுப்பிட்டி பிரதேசத்தில் நேற்று சனிக்கிழமை மாலை நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

வடக்குப் பிரதேசத்தின் அபிவிருத்திக்காக அரசு முன்னெடுத்துள்ள வேலைத்திட்டம் தொடர்பில் மக்களுக்கு எடுத்துரைத்த ஜனாதிபதி, மாகாண சபை முறைமையை மீண்டும் பலப்படுத்தி ஒவ்வொரு மாகாணத்துக்கும் விரிவான அபிவிருத்தியை வழங்குவதே தமது நோக்கமாகும் எனவும் தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

“அன்று நாங்கள் அரசமைத்தபோது அநுரவும் சஜித்தும் இருக்கவில்லை. இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உதவவும் இல்லை. இப்போது அவர்களால் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்கின்றனர். எல்லாவற்றையும் சீர்குலைக்கவே முயற்சிக்கின்றனர். கஷ்டப்பட்டு 2 வருடங்களில் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டோம்.

சில சமயங்களில் கஷ்டமான தீர்மானங்களை எடுத்தோம். வரிசை அதிகரித்து செலவைக் குறைத்தோம். மக்கள் கஷ்டங்களை ஏற்றுக்கொண்டனர். சிறந்த எதிர்காலம் கிடைக்கும் என்று மக்கள் நம்பினர். எனவே, மீண்டும் வரிசை யுகம் தேவையில்லை. எனவே, முன்னோக்கிச் செல்வோம்.

ஐ.எம்.எப் அமைப்புடன் ஆலோசித்து அவர்களின் நிபந்தனைகள் பிரகாரம் செயலாற்றினோம். அதன் பலனான ரூபா வலுவடைந்தது. அதனால் பொருட்களின் விலை குறைந்திருக்கின்றது. அந்தச் சலுகை மக்களுக்கும் கிடைக்கின்றது. வீட்டின் கஷ்டங்களைப் பெண்களே அறிவர். பொருட்களின் விலை குறைந்ததால் அஸ்வெசும நிவாரணம் வழங்கினோம்.

அதேபோன்று பொருளாதாரம் தற்போது மேலும் வலுவடைந்திருக்கின்றது. தனியார் துறையில் சம்பள அதிகரிப்பு கிடைத்தது. அரச ஊழியர்களுக்கும் சம்பள அதிகரிப்பு கிடைத்தது. அடுத்த வருடத்தில் மேலும் அதிகரிப்போம். அரச ஊழியர்கள் பெரும் சுமைகளைத் தாங்கிக்கொண்டனர்.

அதனால் இன்று வாழ்க்கைச் சுமை சற்று குறைந்திருக்கின்றது. இத்தோடு விட்டுவிடாமல் மக்கள் சுமையை மேலும் குறைப்போம். கஷ்டப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவேன். மக்களுக்கு காணி உறுதிகளைத் தந்திருக்கின்றேன். ஒரு சிலருக்குக் கிடைக்கவில்லை தேர்தலின் பின் அந்தத் திட்டம் தொடரும்.

அடுத்த ஐந்து வருடங்களில் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவோம். கல்வியைப் பலப்படுத்துவோம். அதற்கான வேலைத்திட்டங்கள் என்னிடம் உள்ளன. அதனால்தான் “இயலும் ஸ்ரீலங்கா“ என்று சொல்கின்றேன். அநுரவும் சஜித்தும் திட்டங்கள் இல்லாததால் இயலாது ஸ்ரீலங்கா என்றே சொல்லில்கொள்ள வேண்டும்.

நாட்டில் வரிகளைக் குறைத்தால் மீண்டும் பணத்தை அச்சிட நேரிடும். அதனால் ஐ.எம்.எப். சலுகைகள் கிடைக்

தொடர்ச்சி▼





# வரிசை யுகம் வேண்டுமா? நல்ல எதிர்காலம் வேண்டுமா?

தொடர்ச்சி▲


காது. அதனைச் செய்ய வேண்டுமா? எனவே, ரூபாவின் பெறுமதியை அதிகரிப்பதே எனது தேவையாகும். 2023 முன்னெடுத்த திட்டங்களுக்கு தற்போது பலன் கிடைக்கிறது. 2024 இல் செய்தவைக்கு அடுத்த வருடம் தீர்வு கிடைக்கும்.

விரும்பியவருக்கு வாக்களிக்கும் உரிமை வடக்கு மக்களுக்கு உண்டு. அந்த உரிமையைப் பாதுகாப்போம். எனவே செப்டெம்பர் 21 சிலிண்டருக்கு வாக்களியுங்கள். இல்லாவிட்டால் சிலிண்டரும் இருக்காது அபிவிருத்தியும் வராது." – என்றார்.

இந்து மதத் தலைவர்கள், பிரதேச அரசியல் தலைவர்கள் உள்ளிட்ட பெருந்திரளான மக்கள் கலந்து கொண்ட இந்தப் பரப்புரைக் கூட்டத்தில் அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, சுசில் பிரேமஜயந்த, நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் ஆகியோரும் உரையாற்றினர்.







# அநுர குமார கூறும் - கோரும் - மாற்றத்தில் தமிழரின் எதிர்பார்ப்பும் அடங்க வேண்டும்!

## வலியுறுத்துகின்றார் சுமந்திரன்

யாழ்ப்பாணம் வந்த அநுரகுமார திஸநாயக்க இங்கு உரையாற்றுகின்ற போது மாற்றம் சம்பந்தமாக பேசியிருக்கின்றார். அதில் தமிழர்கள் எதிர்பார்க்கும் மாற்றமும் உள்ளடங்க வேண்டும்.

– இவ்வாறு தமிழரசுக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்தின் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் வந்த அநுரகுமார திஸநாயக்க இங்கு உரையாற்றுகிற போது மாற்றம் சம்பந்தமாக பேசியிருக்கின்றார். அதாவது தெற்கிலே ஒரு மாற்றத்தை ஏற்படுத்துகிற வேளையில் வடக்கு மக்களும் அதற்கு ஆதரவாக பங்காளிகளாக இல்லாமல் இருக்கிறார்கள் என்றொரு கருத்தைச் சொல்லியிருக்கிறார்.

அந்தக் கருத்துச் சம்பந்தமாக பல விதமான விமர்சனங்கள் எழுந்திருக்கின்றன. அதற்கு காரணம் கோட்டாபாய ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட உடனேயே அவர் பதவியேற்கிற போது இதைப் போன்ற ஒரு கருத்து செல்லப்பட்டிருந்த்து.

அதாவது வடக்கு மக்கள் பங்குதாரர்களாக தன்னோடு இருந்திருக்கவில்லை என்று கவலைப்பட்டு அவர் சொல்லியிருந்தார்.

ஆனால் கோட்டாவை ஜனாதிபதியாக்கியவர்களே அவரைத் துரத்தியடித்தார்கள். அப்பொழுதே தெரிந்திருக்க வேண்டும் வடக்கு மக்களின் தீர்க்க தரிசன பாதை சரியானதாகத்தான் இருந்திருக்கின்றது எஎன்பது.

ஆக மாற்றத்தைப் பற்றி பேசுகிற பொழுது தெற்கிலே கடந்த இரண்டு வருடங்களாக மாற்றத்திற்கான முயற்சி நடைபெறுகின்றது என்பது உண்மை. நாங்களும் அவ்வாறான மாற்றத்தை வரவேற்கிறோம்.

ஆனால எங்களுடைய மக்கள் கேட்டு கொண்டிருக்கிற – அதாவது 70 வருடங்களுக்கு மேலாக ஒரு தீர்வை நோக்கிச் சொல்லிக் கெண்டிருக்கிற – நிலையில் தெற்கில் இருக்கின்றவர்களின் நிலைமையை பார்த்தால் கவலையாக உள்ளது.

அதிலே பங்குதாரர்களாக வராமல் இன்னமும் இருக்கின்றவர்கள். அவர்களின் மனநிலை எப்படி மாறப் போகின்றது என்கின்ற ஆதங்கமும் இருக்கிறது.

எனவே அநுர குமாரவின் இந்த கருத்தை இனவாத கருத்தாக நான் கருதவில்லை. இது ஒரு துரதிஷ்டவசமான ஒரு சம்பவம். ஆனாலும் இனவாத கருத்து இல்லை என்று நான் நம்புகிறேன்.

ஆகையினாலே எங்களுடைய மக்கள் எதிர்பார்ப்பதைக் கூறி, அதனையும் உள்ளடக்கி மாற்றத்தினை முழுமையாக நாட்டிலே ஏற்படுத் வேண்டும். அவர் (அநுர) வென்றாலும் தேற்றாலும் தமிழர்கள் எதிர்பார்க்கும் அந்த மாற்றத்திற்கும் உறுதுணையாக இருப்பார் என நம்புகிறோம். அதேபோல அவர் வென்றாலும் தோற்றாலும் அவர் சொல்லுகிற மாற்றத்திற்கு அனைவரும் தயராக வேண்டும். – என்றார்.

## ரணிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் இடையில் தொடர்பு இருக்கின்றது என்றும், அவர்களுக்கு வாக்களிப்பது வீணான செயல் என்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

மினுவாங்கொடையில் நடைபெற்ற பரப்புரைக் கூட்டத்தில் உரையாறும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "ஜனாதிபதிரணில்விக்கிரமசிங்கவுக்கு வாக்களிப்பதன் மூலம் ஐக்கிய தேசியக் கட்சியினர் தமது வாக்குகளை வீணாக்குவதை விடுத்து எமக்கு வாக்களிக்க வேண்டும். ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களிப்பது என்பது அநுரகுமார திஸாநாயக்கவுக்கு வாக்களிப்பதாகும். அநுரகுமார திஸாநாயக்கவுக்கு வாக்களிப்பது, பொது நிதியைத் துஷ்பிரயோகம் செய்தவர்களுக்கு ஆதரவான வாக்களிப்பாகும்.

ரணில் விக்கிரமசிங்கவின் சமீபத்திய அறிக்கைகள், அவர் தனது வெற்றியில் உறுதியாக இல்லை என்பதையும், அவருக்கும் அநுரகுமார திஸாநாயக்கவுக்கும் ஒருவித புரிதல் உள்ளது என்பதையும் தெளிவுபடுத்தியுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி அரசு தேசத்தை அபிவிருத்தி செய்யும் என்று ரணில் மற்றும் அநுரகுமார இருவரும் பயப்படுகின்றார்கள். நாங்கள் வீடுகளை நிர்மாணிப்போம் என்று அவர்கள் பயப்படுகின்றார்கள், அனைத்து அரசு பள்ளிகளையும் ஸ்மார்ட் பள்ளிகளாக மாற்றுவோம் என்று அவர்கள் பயப்படுகின்றார்கள். நாங்கள் சுகாதாரத் துறையை மேம்படுத்துவோம் என்று அவர்கள் பயப்படுகின்றார்கள்." – என்றார்.

## வடக்கு மக்களை அச்சுறுத்திய...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**



சிங்கள மக்களின் பெயரைப் பயன்படுத்தி வடக்கு மக்களை அச்சுறுத்தியமைக்காக தென்பகுதி மக்களிடமும் அநுரகுமார மன்னிப்புக் கோர வேண்டும் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணத்தின் சங்கிலியன் பூங்காவில் நேற்று சனிக்கிழமை மாலை நடைபெற்ற 'இயலும் ஸ்ரீலங்கா' வெற்றிப் பேரணியில் உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

அத்துடன், மாகாண சபைகளுக்கு அபிவிருத்திக்கான அதிகாரம் வழங்கப்படும் என்பதுடன் மாகாண அபிவிருத்தி விசேட நிறுவனங்கள் ஆரம்பிக்கப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

விவசாயத் துறையைப் பலப்படுத்தி வரும் நிலையில், வடக்கில் விவசாயத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

வடக்கில் காங்கேசன்துறை, பூநகரி, மாங்குளத்தில் விசேட வர்த்தக வலயம் ஆரம்பிக்கவிருப்பதுடன் வடக்கில் சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் வடக்கில் டிஜிட்டல் மத்திய நிலையமொன்றை ஆரம்பிக்கவிருப்பதாகவும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:-

“ஜனாதிபதித் தேர்தலை நடத்த முடியும் என இரண்டு வருடங்களுக்கு முன்னர் யாரும் நம்பியிருக்கவில்லை. அனைத்திற்கும் வரிசை இருந்தது. நாட்டில் ஸ்தீரத்தன்மையைப் பாதுகாத்து பொருளாதாரத்தைப் பலப்படுத்தியுள்ளேன். அந்த நிலையில் ஜனாதிபதித் தேர்தலை நடத்தக் கூடியதாக உள்ளது. இயலும் ஸ்ரீலங்கா எண்ணக்கருவை முன்னெடுத்து வருகின்றேன்.

சஜித்தும் அநுரவும் பொறுப்புக்களை ஏற்க முன்வரவில்லை. அவர்கள் இருந்தால் தேர்தலை நடத்தியிருக்க முடியுமா? கூட்டங்களில் பேச முன்னர் அவர்கள் எனக்கு நன்றி சொல்ல வேண்டும்.

இன்னும் பிரச்சினைகளும், சிரமங்களும் உள்ளன. ஆனால் எதிர்பார்ப்பு பற்றிய எதிர்பார்ப்பு உள்ளது. அந்த எதிர்பார்ப்பைப் பாதூக்ககவே நான் போட்டியிடுகின்றேன்.

கடந்த காலத்தில் எமது கடன் சுமை அதிகரித்திருந்தது. கடன் பெறுவதை நிறுத்தினோம். கடன் பெறுவதை நிறுத்தியதால் வரிகளை அதிகரிக்க நேரிட்டது. பண வீக்கம் அதிகரித்திருந்தது. இரு வேளை சாப்பிடுவது கூட கஷ்டமாக இருந்தது.

தற்போது பொருளாதாரம் பலமடைந்துள்ளது. அஸ்வெசும திட்டத்தின் கீழ் 24 இலட்சம் பேருக்கு வழங்கி இருக்கின்றோம். இன்னும் 5 இலட்சம் பேருக்கு அஸ்வெசும வழங்கப்பட வேண்டும். சம்பள உயர்வு வழங்கியுள்ளதோடு ஓய்வூதியங்களையும் அதிகரித்துள்ளோம். பொருளாதாரம் வலுவடைந்துள்ளதாலே அவற்றைச் செய்ய முடிந்தது. பொருட்களின் விலைகளும் குறைந்துள்ளன. மேலும், நிவாரணங்கள் வழங்க வேண்டும்.

பொருட்களின் விலைகள் குறைவடைந்து வருகின்றன. வாழ்க்கைச் செலவு இன்னும் அதிகமாக இருக்கின்றது. அதனால்ரூபாவின்பெறுமதியைப்பலப்படுத்தி வாழ்க்கைச் செலவைக் குறைக்க வேண்டும். ரூபாவின் பெறுமதி வலுவடையும்போது இன்னும் சலுகைகளை வழங்கலாம். அடுத்த வருடம் மேலும் சலுகைகள் வழங்குவேன். வரியை குறைத்து, சலுகைகள் வழங்க முடியாது. 2019 இல் கோட்டாபய வரியைக் குறைத்தார். நாட்டின் வருமானம் குறைந்தது.

2022 இல் பொருளாதார வீழ்ச்சி ஏற்பட்டது. பெண்களுக்காக தனியான விஞ்ஞாபனத்தைச் சமர்ப்பித்துள்ளேன். அவர்களை வலுவூட்ட சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. ஒவ்வொரு பொலிஸ் நிலையங்களிலும் தனியான பிரிவு ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மக்களுக்கும் உறுமய காணி உறுதி பெற்றுக்கொடுக்கப்படும். அடுத்த வருடம் மேலும் வாழ்க்கைச் செலவைக் குறைப்போம். உற்பத்தி அதிகரிக்கும்போது அனைவரிடமும் வரி அறவிடப்படும். அத்தோடு தற்போது வரி செலுத்துவோரின் வரிச்சுமை குறையும்.

விவசாயத்துறையைப் பலப்படுத்தி வருகின்றோம். வடக்கு விவசாயத்துக்கு முக்கியமானது. டிஜிட்டல் பொருளாதாரத்தை ஏற்படுத்த இருக்கின்றோம். வடக்கில் காங்கேசன்துறை, பூநகரி, மாங்குளத்தில் விசேட வர்த்தக வலயம் ஆரம்பிக்க இருக்கின்றோம். இந்தப் பிரதேசத்தில் சுற்றுலாத்துறையை ஊக்குவிக்கின்றோம். டிஜிட்டல் மத்திய நிலையமொன்றை ஆரம்பிக்க இருக்கின்றோம். இவற்றை அரசினால் தனியாக மேற்கொள்ள முடியாது.

9 மாகாண சபைகளுக்கும் அரசுடன் பணியாற்றுவதற்காக மாகாண சபைகளுக்கு அபிவிருத்திக்கான அதிகாரம் வழங்கப்படும். மாகாண அபிவிருத்தி விசேட நிறுவனங்கள் ஆரம்பிக்கப்படும்.

வடக்கு மக்களை அநுரகுமார அச்சுறுத்துகின்றார். மாற்றத்துக்காகத் தெற்கு மக்கள் தயாராகியிருக்கையில் அந்த மாற்றத்துக்கு எதிராகச் செயற்பட்டால் எவ்வாறான மனநிலை தெற்கில் ஏற்படும் என்கிறார். அவரது வெற்றியின் பங்காளர்களாக வர வேண்டும் என்கின்றார். தனக்கு வாக்களிக்காவிட்டால் பார்த்துக் கொள்வோம் என அநுரகுமார எச்சரித்தார். அதனை நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

2010 ஜனாதிபதித் தேர்தலின் போது இங்கு வந்து சரத் பொன்சேகாவுக்கு வாக்களிக்கக் கோரினோம். வடக்கு மக்கள் பொன்சேகாவுக்கு வாக்களித்தனர். தெற்கு மக்கள் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களித்தனர். மஹிந்த ராஜபக்ஷ வென்றார். உங்களை யாராவது தாக்கினார்களா?

2015 இல் மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களிக்கக் கோரினோம். தென்பகுதி மக்கள் மஹிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களித்தனர். நாம் வென்றோம். ஏதாவது நடந்ததா? 2019 இல் வடக்கு மக்கள் சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களித்தார்கள். தெற்கில் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வாக்களித்தார்கள். கோட்டாபய இராணுவத்தை அழைத்து வந்தாரா? தேர்தல் முடிவுகளை மக்கள் அங்கீகரித்தனர். அநுரகுமார எப்படி மக்களை அச்சுறுத்த முடியும்? வடக்கு மக்களை மட்டுமன்றி தெற்கு மக்களையும் அவர் அச்சுறுத்துகின்றார். அதுதான் அவர்களின் போக்கு.

அநுர வெற்றி பெற மாட்டார். முன்பு துண்டுப்பிரசுரம் பகிர்ந்தார். வடக்கு மக்களிடம் அநுர மன்னிப்புக் கோர வேண்டும். தென்பகுதியில் உள்ள சிங்கள மக்களின் பெயரைப் பயன்படுத்தி அச்சுறுத்தியதற்காக தென்பகுதி மக்களிடமும் அநுர மன்னிப்புக் கோர வேண்டும். பின்னர் அவர் எதிர்க்கட்சிக்கு வரலாம். அவருக்கு யாழ்ப்பாணத்திற்கு வர முடியாது போகும். நாம் முன்னர் அவர்களுக்கு அஞ்சவும் இல்லை. இப்போது அஞ்சவும் இல்லை. சஜித் பற்றி பேசிப் பயனில்லை. எதிர்க்கட்சித் தலைவரின் பொறுப்பை அவர் செய்திருந்தால் அநுர முன்னேறி வந்திருக்கமாட்டார். அவருக்கு அளிக்கும் வாக்குகள் பயனற்றதாகும். எமது நாட்டை முன்னேற்ற வேண்டும். எனவே, காஸ் சிலிண்டருக்கு வாக்களித்து என்னை வெற்றி பெறச் செய்யுங்கள்.” - என்றார்.

வட பகுதி மக்கள் பிரதிநிதிகள், அமைப்பாளர்கள் உள்ளிட்ட பெருந்திரளான மக்கள் பங்கேற்ற இந்தப் பரப்புரைக் கூட்டத்தில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, அமைச்சர் சிறிபால டி சில்வா, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோரும் உரையாற்றினர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஜெனிவாத் திருவிழா

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 57 ஆவது கூட்டத் தொடர் நாளை ஆரம்பமாகின்றது.

இந்தக் கூட்டத்தொடர் இலங்கையைப் பொறுத்தவரை - இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரை - மிக முக்கியமானது.

யுத்தம் முடிவடைந்த பின்னர் இந்த 15 வருட காலத்தில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் காலத்துக்கு காலம் இலங்கை தொடர்பாகப் பிரேரணைகள் முன்வைக்கப்பட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

அந்த வரிசையில் 2021 மார்ச்சில் நடைபெற்ற 46வது அமர்வில் 46/01 இலக்கத் தீர்மானம் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்டது.

அந்தத் தீர்மானம் காலாவதியாகும் நிலையில் 2022 ஒக்டோபரில் 51 ஆவது கூட்டத் தொடரில் 51/01 இலக்கத் தீர்மானம் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்டது.

அந்தத் தீர்மானம் இந்த 57 ஆவது அமர்வுடன் காலாவதியாகும் நிலையில் புதிய தீர்மானத்திற்கான பிரேரணை இம்முறை கவுன்ஸிலில் முன்வைக்கப்பட இருக்கின்றது.

அந்தப் பிரேரணைக்கான முன்னேற்பாடாக இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் அவதானிப்பு அறிக்கை நாளை அல்லது நாளை மறுதினம் ஜெனிவாவில் வெளியாக உள்ளது.

ஏற்கனவே ஆணையாளரின் அறிக்கையின் நகல் வெளிவந்துவிட்டது. அது தொடர்பில் இலங்கையின் பிரதிபலிப்புகள், ஆட்சேபங்கள், அவற்றையொட்டிய திருத்தங்களுடன் மூல அறிக்கை நாளை அல்லது மறுதினம் கிட்டும். அதன் அடிப்படையில் புதிய தீர்மானத்திற்கான வரைவுப் பிரேரணையை பிரிட்டன், கனடா உட்பட்ட இணை அனுசரணை நாடுகள் தயாரிக்க உள்ளன. அதனை ஒட்டிய ஆலோசனைக் கூட்டங்கள், பக்கக் கருத்தமர்வுகள், ஒன்று கூடல்கள் ஜெனிவாவில் நடைபெறும். இது வழமையான ஒழுங்குதான்.

இலங்கை விவகாரத்தில், யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இழைக்கப்பட்டவை என்று கூறப்படும் யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக, நீதி - நியாயமான விசாரணைகள் நடைபெற்று, குற்றம் இழைத்தோர் சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டு, உண்மைகள் வெளிக் கொணரப்பட்டு, பொறுப்புக் கூறல் நிலைநிறுத்தப்பட்டு, பாதிப்புற்றோருக்கு இழப்பீடுகள் வழங்கப்பட்டு, மீள நிகழாமை உறுதி செய்யப்பட வேண்டும் என்பது தொடர்ந்து வரும் இந்தத் தீர்மானங்களில் இடம்பெறுவது வழமை.

இரண்டு வருடங்கள், மூன்று வருடங்களுக்கு ஒரு முறை இத்தகைய தீர்மானங்கள் நிறைவேற்றப்படுவதும், இவ்விடயங்களை ஒட்டிய நகர்வுகள், முன்னேற்றங்கள் மிகவும் மந்தமாக இருக்கின்றமையும், இது தொடர்பான விடயத்தில் பாதிக்கப்பட்ட தரப்புகளுக்கு அதிருப்தியும் எரிச்சலும் அவநம்பிக்கையும் தருவனாக இருந்தாலும், அவற்றைச் சகித்து முன்நகர்வதை தவிர பாதிக்கப்பட்ட தமிழர் தரப்புக்கு வேறு வழி இல்லை என்பதுதான் யதார்த்தம்.

யுத்தத்தின் போது இழைக்கப்பட்ட குற்றங்கள்தொடர்பான ஆவணங்கள், சான்றுகள், ஆதாரங்களை சேகரித்து, பதிந்து ஒழுங்குபடுத்தும் கட்டமைப்பை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலே தனித்துவமாக செய்யும் அளவுக்கு இந்த விவகாரத்தில் முன்னேற்றம் இருக்கின்றது. மிக மந்தம் - வேகம், முன்னேற்றம் குறைவு - என்றாலும் விடயம் முன்நகர்வதால் பொறுமை காப்பது யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தரப்பான தமிழர்களுக்கு தவிர்க்க முடியாத கட்டாயம்தான்.



# இந்தியாவிலிருந்து முட்டை இறக்குமதி

இந்த வாரம் இறுதியில் இந்தியாவிலிருந்து 30 இலட்சம் முட்டைகள் இறக்குமதி செய்யப்படவுள்ளன என்று இலங்கை அரச வர்த்தக பல்நோக்குக் கூட்டுத்தாபனம் ஆசிரி வலிசுந்தர தெரிவித்துள்ளார்.

முட்டை கொள்முதல் பணிகள் நிறைவடைந்துள்ளன. முட்டைகள் இறக்குமதிக்கான விண்ணப்பங்கள் விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத்துறைக் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளன.

இந்தநிலையில், இறக்குமதி செய்யப்படும் முட்டைகளை 40 ரூபாவுக்கு விற்பனை செய்ய முடியும் என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# ஓய்வுபெற்ற இராணுவச் சிப்பாய் யானை தாக்கி பரிதாப உயிரிழப்பு

வயல்வெளிக்குள் புகுந்த காட்டு யானைகளை விரட்ட முற்பட்ட ஓய்வு பெற்ற இராணுவச் சிப்பாய் ஒருவர் யானை தாக்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் புஞ்சிஹல்மில்லேவ பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கஹடகஸ்திகிலிய, ரன்பத்வில பிரதேசத்தில் வசித்து வந்த ஓய்வுபெற்ற இராணுவச் சிப்பாயான ஆர்.டபிள்யூ. எம்.ஜி.அபேரத்ன என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கஹட்டகஸ்திகிலிய பொலிஸ் நிலையப் பிரதான பொலிஸ் பரிசோதகர் இ.எஸ். அபேசேகர உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகள் குழு மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இரகசியம் பரகசியம்...

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

இப்போது அடுத்த திருவிழாவை ஆரம்பித்து இருக்கின்றார் மாவையர்.

மத்திய குழுக் கூட்டத் தீர்மானப்படி கட்சி சஜித் பிரேமதாஸவின் வெற்றிக்கு வழி சமைத்து நிற்கின்றது.

ஆனால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாவையரை சந்திப்பதற்காக அவர் வீடு தேடி சென்றதும், அடுத்த அந்தர் பல்டி மாவையிடமிருந்து வந்தது.

ரணில் விக்கிரமசிங்கவே இந்த தேர்தலில் வெல்ல வேண்டும் என்ற நிலைப்பாட்டை அவர் (மாவையர்) அறிவித்திருக்கின்றார்.

ரணிலுடனான அவரின் சந்திப்பை அடுத்து, ரணில் வெல்ல வேண்டும் என அவர் ஊடகங்களுக்கு தெரிவித்த கருத்தைப் பார்த்துவிட்டு கனடாவில் இருந்து ஒரு நண்பர் அழைப்பு எடுத்தார்.

"என்ன, மாவையர் ஒரே குழப்பம் குழப்புகின்றார். என்னவாம் மாவைக்கு?" என்றார்.

"ஆம். அவர் கருத்துக்கள் குழப்பமாகத்தான் வருகின்றன. அது அவரின் சுபாவம்தானே...?" – என்றேன் நான்.

"இல்லை..இல்லை. அப்படி அவர் குழம்புவதற்கு காரணங்கள் உண்டு. அது உங்களுக்கு விளங்கவில்லையா?" – என்று கேட்டார் நண்பர்.

நான் "உண்மையில் எனக்கு விளங்கவில்லை!" – என்றேன்.

"என்ன பத்திரிகையாளர் நீர்?" – என்று சிடு சிடுத்தார் என் நண்பர்.

"தமிழரசு இப்படியான தேர்தல் சமயத்தில் தெற்கின் ஒரு தலைவரை ஆதரிக்க முடிவை எடுத்தால் அது பற்றிய பிரசாரத்தை ஒட்டி பல செலவுகள் இருக்கும். அதற்கான 'டீல்கள்' உண்டு. சரத் பொன்சேகா, மைத்திரிபால சிறிசேன, சஜித் பிரேமதாஸ என்று 2010, 2015, 2019 இல் ஆதரித்த போது பிரசாரம், கூட்டங்கள் என்று பல செலவுகள் இருந்தன. பல 'C'கள் கைமாறின. இந்தத் தடவை கட்சித் தலைவரான தாம் எம்.பியாக இல்லாதமையால், டீல்களில் தன்னைத் தவிர்த்து, ஓரம் கட்டிவிட்டார்கள் என்று கோபம் மாவைக்கு. ஏற்கனவே எம்.பி. பதவி இழந்தமையால் வறண்டு போய் கிடக்கின்றது அவரது கஜானா. இந்தச் சமயத்தில் டீல்களில் தம்மை ஒதுக்கி விட்டனரோ என்று ஆதங்கம் மாவைக்கு. முன்னராவது சம்பந்தன் இருந்தார். ஒழுங்குகளை ஒழுங்காக – ஓரளவு நீதியாக – வகுத்திருப்பார் என்று மாவை நம்பி வந்தார். இப்போது சம்பந்தனும் இல்லை. தம்மை வெட்டி ஓரங்கட்டி விட்டார்கள் என்று ஆதங்கம் வேறு. அந்தப் பின்னணியில்தான் முதல் நாள் அவர் புலம்ப, அடுத்த நாள் ஏதோ ஒரு மாதிரிக் கவனித்து, சரி செய்து விட்டார்கள் பார்த்தீர்களா?" என்றார் என் நண்பர்.

எனக்கு புரிந்த மாதிரியும் இருந்தது. புரியாத மாதிரியும் இருந்தது. இந்த சமயத்தில் என் நண்பர் தொடர்ந்தார்.

"இந்தக் குழப்ப விடயத்தைத் தமது புலனாய்வு வட்டாரங்கள் மூலம் அறிந்ததும் ரணில் – நரித் தந்திர சாலி – தாமே மாவையரைத் தேடிச் சென்று டீல் முடித்துவிட்டு புறப்பட்டு விட்டார். அவர் போனதும் அவர் வெல்ல வேண்டும் என்று மாவையர் அதிரடி அறிவிப்பு விட்டதன் பின்னணியில் ஜனாதிபதி ரணில் கொடுத்த ஊக்கம் காரணமாக இருக்கும்." – என்றார் என் நண்பர்.

அவர் கூறியவை உண்மையாகவும் இருக்கலாம். பொய்யாகவும் இருக்கலாம். ஆனால் சூழ்நிலை, சந்தர்ப்பங்களை வைத்துப் பார்க்கும்போது மறுக்க முடியாததாகவும் அது உள்ளது.

வரும் ஞாயிற்றுக்கிழமை 14ஆம் திகதி தமிழரசின் மத்திய குழு மீண்டும் கூடுகிறது. சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பது எனக் கடந்த முதலாம் திகதிய மத்திய குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தை எப்படி நடைமுறைப் படுத்துவது என்று ஆராய்வது 14ஆம் திகதிய கூட்ட நிகழ்ச்சி நிரலின் முக்கிய அம்சம்.

ஆனால் வெளிப்படையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் மாவையின் நேற்றைய சந்திப்பின்போது திருப்திகரமான டீல் எட்டப்பட்டு இருக்குமானால், 14ஆம் திகதிய மத்திய குழுக் கூட்டம் மேலும் களேபரப்படும் என்பது மட்டும் நிச்சயம்.




# ஜனாதிபதியைத் தீர்மானிக்கும் சக்தியாகத் தமிழரின் வாக்குகள்

## ரணிலை வெல்ல வைக்க வேண்டும் என்று யாழ். பரப்புரையில் விஜயகலா கோரிக்கை

"இன்று தமிழ் மக்களின் வாக்குகள் தான் ஜனாதிபதியைத் தீர்மானிக்கும் சக்தியாக மாறியிருக்கின்றன. எனவே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதி செய்ய வேண்டியுள்ளது. இல்லாவிட்டால் வங்குரோத்து நிலை வருவதைத் தடுக்க முடியாமல் போய்விடும்."

– இவ்வாறு முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், சங்கிலியன் பூங்காவில் நேற்று சனிக்கிழமை மாலை நடைபெற்ற "இயலும் ஸ்ரீலங்கா" வெற்றிப் பேரணியில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"2022 ஆம் ஆண்டு நாடு வங்குரோத்து நிலைக்குச் சென்றதால் எல்லா விதமான அத்தியாவசியப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு வந்தது. இவ்வாறான கஷ்டங்களிலிருந்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே நாட்டு மக்களை மீட்டெடுத்தார். இன்று பலரும் அதனை மறந்துபோயுள்ளனர்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து மீண்டு வர ஜனாதிபதி தனியொரு நபராக போராடினார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொருளாதாரப் பிரச்சினைகளுக்குச் சரியான தீர்வுகளைக் கொண்டிருக்கின்றார்.

எனவே, இந்தத் தேர்தலில் போட்டியிட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டுமே தகுதியானவர். அனுபவமற்ற தலைவரைத் தெரிவு செய்தமையினாலேயே கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சி சரிவைக் கண்டது. அன்று பெருமளவான நாடாளுமன்ற உறுப்பினர்கள் தன்னோடு இருந்தபோதும் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீக்க சஜித் பிரேமதாஸ முன்வரவில்லை.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் மக்களை மீட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது இயலுமையைக் காண்பித்திருக்கின்றார். ஆனால், மற்றைய வேட்பாளர்களுக்கு அந்த இயலுமையும் இல்லை, நாட்டின் முன்னேற்றத்திற்கான திட்டமும் இல்லை.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வழிகாட்டியவர்களே இன்று சஜித் பிரேமதாஸவுக்கும் வழிகாட்டுகின்றனர். எனவே, வடக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் மட்டுமே தீர்வு வழங்க முடியும்.

எனவே, 2005 ஆம் ஆண்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வாக்களிக்காமல் வடக்கு மக்கள் செய்த தவறை மீண்டும் செய்யக்கூடாது. வடக்கு மக்களின் காணிப் பிரச்சினைக்கும் அவரே தீர்வுகளை வழங்க முன்வந்தார்." – என்றார்.

**தேர்தலில் ரணில்...**

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

மாவை சேனாதிராஜாவின் தனிப்பட்ட அழைப்பின் பிரகாரம் ஜனாதிபதி, அவரின் இல்லத்திற்கு சென்றார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி தேர்தலின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் இந்த சந்திப்பின் போது விசேடமாக கலந்துரையாடப் பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சந்திப்பு குறித்து பின்னர் மாவை சேனாதிராஜா கூறியவை வருமாறு:–

"ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலிலே ஒரு வேட்பாளராக இருப்பவர். என்னைச் சந்திக்க வேண்டும் என்று எனது வீட்டிற்கு வந்துள்ளார். நாங்கள் அவரை ஒரு ஜனாதிபதி என்ற முறையிலும், தேர்தலில் வேட்பாளர் என்ற முறையிலும் நானும் சம்மதம் கொடுத்தேன். ஆனபடியால் இந்த தேர்தல் நேரத்திலே அவரும் வந்திருப்பதை எல்லோரும் உணர்ந்துகொள்ளலாம். அவர் அது தனக்கு ஆதரவு என்று நினைத்தாலும் அதைப்பற்றி அதிகம் நாங்கள் பேசிக்கொள்ளவில்லை. நான் குறிப்பிட்டது என்னவெனில் தேர்தல் முடிந்ததும் நீங்கள் வெற்றி பெற வேண்டும். இனப் பிரச்சினைக்கு 3 மாத கால அவகாசத்திற்குள் ஒரு புதிய அரசியல் அமைப்பை உருவாக்கி, சமஷ்டி இலங்கையின் தலைவராக நீங்கள் வந்து, இனப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பீர்கள் என நம்புகின்றோம்.

அவர் பெரும்பாலும் எங்கள் பிரதேசங்களுடைய பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பிலேயே குறிப்பிட்டுப் பேசியிருந்தார்.

இதற்கு தேர்தல் முடிந்த பின்பு நீங்கள் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் – வருவார் என நம்புகின்றோம் – 3 மாத கால அவகாசத்திற்குள் ஒரு புதிய அரசியல் அமைப்பை உருவாக்கி, சமஷ்டி இலங்கையின் தலைவராக நீங்கள் வந்து, இனப் பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாக இருக்கின்றது என்பதனை கூறியுள்ளேன்." – இப்படி மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.




# தமிழ்த் தேசிய நிலைப்பாட்டின் அடிப்படையில் தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிப்பதில் உறுதி

## பிரித்தானியாவில் புலம்பெயர் தமிழர்கள் முன்னிலையில் சிறீதரன் எடுத்துரைப்பு




"எனது அரசியல் பயணத்தையும் அது சார்ந்த பணிகளையும் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் நின்றுதான் எமது மக்கள் ஏற்றுக்கொண்டார்கள். அதன் அடிப்படையிலேயே காலத்தின் தேவையுணர்ந்து தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்கும் நிலைப்பாட்டில் நான் உறுதியாக இருக்கின்றேன்."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பால் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாக்கியசெல்வம் அரியநேத்திரன் தமிழ்ப் பொது வேட்பாளராகக் களமிறக்கப்பட்டுள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதாக அறிவித்திருக்கும் நிலையில், தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரனை ஆதரிக்கும் நிலைப்பாட்டில் தான் உறுதியாக இருக்கின்றார் என்று சிறீதரன் எம்.பி. அறிவித்துள்ளார்.

கடந்த மாதம் 29ஆம் திகதி இலண்டனுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த சிறீதரன் எம்.பி., அங்கு முதலாவது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் உமா குமரன் உள்ளடங்கலாக பல்வேறு தரப்பினரைச் சந்தித்துக் கலந்துரையாடல்களை முன்னெடுத்திருந்தார்.

அதன் ஓரங்கமாக இரு தினங்களுக்கு முன்னர் பிரித்தானியவாழ் புலம்பெயர் தமிழர்களின் ஏற்பாட்டில் அங்கு நடைபெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றிய சிறீதரன் எம்.பி., "ஈழத் தமிழர்களை மையப்படுத்திய தமிழ்த் தேசிய அரசியல் நீரோட்டத்தில் இனத்தின் இருப்புக்காகவும், இறைமைக்காகவும் அரசியல் பணியாற்றுவதற்காகவே நான் இணைந்துகொண்டேன். எனது அரசியல் பயணத்தையும், அது சார்ந்த பணிகளையும் அதே தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் நின்றுதான் எமது மக்கள் ஏற்றுக்கொண்டார்கள். அதனால் இறுதி வரை அந்தக் கொள்கையில் பிறழ்வுற்றுப் பயணிக்கத் தலைப்பட்டுள்ளேன்." – என்று தெரிவித்துள்ளார்.

அதுமாத்திரமன்றி அதன் அடிப்படையிலேயே காலத்தின் தேவையுணர்ந்து தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிக்கும் நிலைப்பாட்டிலும் தான் உறுதியாக இருக்கின்றார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.








# பேசாலையில் 188 கிலோ கேரள கஞ்சா பறிமுதல்

மன்னார் – பேசாலை பகுதியில் 188 கிலோ கிராம் நிறையுடைய கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.


கடற்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது இந்த கஞ்சா தொகை கைப்பற்றப்பட்டுள்ளது.

83 பொதிகளில் அந்த கஞ்சா தொகை பொதி செய்யப்பட்டிருந்ததாக கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அதன் மொத்த பெறுமதி 75 மில்லியன் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது.









# சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு

நாட்டுக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்தும் அதிகரித்து வருவதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி இந்தியா, பிரித்தானியா, ஜேர்மனி, சீனா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளில் இருந்து வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையே அதிகரித்து வருகின்றது.

இம் மாதத்தின் கடந்த ஐந்து நாள்களில் மாத்திரம் 21,073 பேர் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.



# டெங்கு நோயாளர் அதிகரிப்பு: பொதுமக்களுக்கு எச்சரிக்கை

டெங்கு நுளம்பு பெருகுவதைத் தடுக்கும் வகையில் சுற்றுச் சூழலை சுத்தமாக வைத்துக் கொள்ளுமாறு சுகாதார தரப்பினர் பொதுமக்களிடம் கோரியுள்ளனர்.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 37 ஆயிரத்து 233 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அதற்கமைய மேல் மாகாணத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். அந்த எண்ணிக்கை 15 ஆயிரத்து 490 ஆகும்.

அத்துடன், இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் 17 டெங்கு மரணங்கள் பதிவாகியுள்ளன என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.



# ராஜபக்ஷ குழாமை விரட்டியடித்த ரணில்

மஹிந்த ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ உட்பட ராஜபக்ஷக்கள் முகாமில் உள்ள 27 நாடாளுமன்ற உறுப்பினர்களை ஆளுங்கட்சியிலிருந்து நீக்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார் எனத் தெரியவருகின்றது.

இதன்பிரகாரம் அரசின் எந்தவொரு வேலைத்திட்டங்களிலும் அவர்கள் பங்கேற்கக்கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நாமல் ராஜபக்ஷ பக்கம் நிற்கும் 4 இராஜாங்க அமைச்சர்களின் பதவிகளை ஜனாதிபதி பறித்துள்ளார். ஏனைய நால்வரின் பதவிகளும் விரைவில் பறிக்கப்படவுள்ளது.

இந்நிலையிலேயே ராஜபக்ஷ முகாமில் உள்ள சி.பி. ரத்னாயக்க, சஞ்ஜீவ எதிரிமான்ன, சாகர காரியவசம், ஷசீந்திர ராஜபக்ஷ, நிபுன ரணவக்க உட்பட 27 எம்.பிக்களை அரசிலிருந்து நீக்குவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது.

# மார்ச் 12 இயக்கத்தின் நேற்றைய விவாதத்தில் கலந்துகொள்ளாத ஜனாதிபதி வேட்பாளர்கள்

“மார்ச் 12 இயக்கம்” ஏற்பாடு செய்திருந்த ஜனாதிபதி விவாதத்துக்கு உறுதிப்படுத்தப்பட்ட 3 வேட்பாளர்கள் கலந்துகொள்ளவில்லை.

“மார்ச் 12 இயக்கம்“ ஏற்பாடு செய்த ஜனாதிபதித் தேர்தலுக்கான மிகவும் எதிர்பார்க்கப்பட்ட பொது விவாதம் நேற்று சனிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது. ஆனால், உறுதிப்படுத்தப்பட்ட நான்கு வேட்பாளர்களில் ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர மட்டுமே கலந்துகொண்டார்.

குறித்த விவாவத்துக்கு ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளரான சஜித் பிரேமதாஸ, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ மற்றும் தமிழ்ப் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரன் அனைவரும் ஆரம்பத்தில் விவாதத்தின் முதல் கட்டத்தில் பங்கேற்க உறுதியளித்தனர். ஆனால், நேற்று நிகழ்ச்சி தொடங்கும்போது அவர்கள் வரவில்லை.

ஜனாதிபதி வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்க மற்றும் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் விவாதத்தில் பங்கேற்பதை உறுதிப்படுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




# தேர்தல் முறைப்பாடுகளுக்குத் தீர்வு; தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக கிடைத்துள்ள 1,707 முறைபாடுகளுக்கு தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவற்றில் 753 முறைபாடுகள் குறித்து நடவடிக்கை எடுத்துவருவதாக ஆணைக்குழு கூறியுள்ளது.

2024 ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய 2,460 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன எனத் தேர்தல் ஆணைக்குழு குறிப்பிடுகின்றது.

இவற்றில் தேர்தல் சட்டமீறல்கள் தொடர்பில் 2,387 முறைப்பாடுகள் பதிவாகியுள்ளன.



# நாட்டில் நேற்று இடம்பெற்ற விபத்துகளில் நால்வர் பலி!

நாட்டில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்துகளில் நால்வர் உயிரிழந்துள் ளனர்.

பொத்துஹெர, குடாஓய, வாரிய பொல மற்றும் முந்தல் ஆகிய பொலிஸ் பிரிவுகளில் இந்த விபத்துக்கள் இடம் பெற்றுள்ளன எனஒ பொலிஸார் தெரி வித்தனர்.

கொழும்பு - குருநாகல் வீதியின் கந்துருகும்புர பகுதியில் காரொன்று மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் 30 வயது இளைஞர் ஒருவர் உயிரிழந் தார்.

தனமல்வில - வெல்லவாய வீதி யில் தெள்ளுல்ல பிரதேசத்தில் இடம் பெற்ற வாகன விபத்தில் 52 வயதுடைய ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அவர் செலுத்திய மோட்டார் சைக்கிள் லொறியுடன் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

வாரியபொல - புத்தளம் வீதியில் பம்பரகம்மன பிரதேசத்தில் இலங்கை போக்குவரத்து சபை பஸ்ஸும் தனியார் பஸ்ஸும் மோதி விபத்துக்குள்ளானதில் இலங்கை போக்குவரத்து சபை பஸ் ஸின் மிதிபலகையில் பயணித்த ஒருவர் உயிரிழந்தார்.

மிதிபலகையில் பயணித்த மற்று மொருவர் காயமடைந்துள்ளார்.

சிலாபம் - புத்தளம் வீதியில் பத்தளு ஓயா பகுதியில் பாதசாரிகள் மீது கார் மோதியதில் பத்தளுஓயாவை சேர்ந்த 39 வயதுடைய ஒருவர் உயிரிழந் தார்.


கார் சாரதி காருடன் தப்பிச் சென் றுள்ளார். அவரைத் தேடி விசாரணை களை முன்னெடுத்துள்ளனர் எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

# தமது வாக்குச் சீட்டை முகநூலில் பதிவேற்றிய ஈ.பி.ஆர்.எல்.எவ். உறுப்பினர் விசாரணையில்

(கே.வசந்தன்)

வாக்கு சீட்டை முகநூலில் பதிவிட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் உயர் பீட உறுப்பினரரை வவுனியா பொலிஸார் நேற்று விசாரணைக்கு உட்படுத்தினர். அவரது கைத்தொலைபேசியும் பகுப் பாய்வுக்காக பொலிஸாரால் பெறப் பட்டுள்ளது.

தபால் மூல வாக்களிப்பு கடந்த 4,5,6 ஆம் திகதிகளில் இடம்பெற்ற நிலையில் 5 ஆம் திகதி மாலை தனக்கு சொந்த மான முகப்புத்தகத்தில் மேற்படி கட்சி யின் உயர் பீட உறுப்பினரும், பொது வேட்பாளரை ஆதரிக்கும் பொதுகட்ட மைப்பின் வவுனியா மாவட்ட நிதிக் கையாளுகைக்கு பொறுப்பாளருமான க.அருந்தவராசா (மேழிக்குமரன்) சங்கு சின்னத்திற்கு புள்ளடியிடப்பட்ட வாக்கு சீட்டை தனது முகப்புத்தகத்தில் பதிவேற்றியிருந்தார்.




இது தொடர்பில் தேர்தல் ஆணையா ளர், வவுனியா மாவட்ட உதவித் தேர் தல் ஆணையாளர் மற்றும் தேர்தல் கண்காணிப்பு குழுக்கள் என்பவற்றுக்கு செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய உதவித் தேர்தல் ஆணையாளரால் வவுனியா பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்த முறைப்பாட்டுக்கு அமைய, அந்நபரை அழைத்து விசாரணை நடத் திய வவுனியா பொலிஸார் அவரது கைத் தொலைபேசியைப் பெற்று அதனைப் பகுப்பாய்வுக்கு அனுப்பி வைக்க நடவ டிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, சங்கு சின்னத் திற்கு புள்ளடியிட்ட வாக்கு சீட்டைப் படமெடுத்த ஆசிரியர் ஒருவர் முல்லைத் தீவில் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கு இடையில் நிரந்தரத் தீர்வுக்கு நடவடிக்கை எடுப்பராம்

## இப்படி நம்புகின்றார் பொது வேட்பாளர் அரியநேத்திரன்

(கே.வசந்தன்)

பத்தாவது ஜனாதிபதி தேர்தலுக்கு இடையிலே நிரந்தர அரசியல் தீர்வை முன்வைப்பதற்கான ஒரு நடவடிக்கையை அவர்கள் எடுப்பதற்கான வாய்ப்பு இருக்கின்றது என தமிழ் பொது கட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் ப.அரியநேந்திரன் தெரிவித்தார்.

வவுனியாவில் இன்று பிரசார நடவடிக்கைகளை முன்னெடுத்த நிலையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

இந்த தேர்தலின் ஊடாக தமிழ் பொது வேட்பாளரை நிறுத்தியதன் மூலம் சர்வ தேசத்திற்கும் சிங்கள தேசத்திற்கும் அயல் நாடான இந்தியாவுக்கும் ஒரு செய்தியை சொல்ல இருக்கின்றோம். கடந்த 75 ஆண்டுகளாக ஏமாற்றப்பட்ட இனம் இனியும் ஏமாறுவதற்கு தயார் இல்லை என்பதே ஆகும்.

ஒன்பதாவது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட உள்ள அந்த தென்பகுதியைச் சேர்ந்தவருக்கு தாங்கள் தொடர்ச்சியாக தமிழ் மக்களை ஏமாற்றி இருக்கின்றோம் என்ற மனசாட்சி அவர்களுக்கு உறுத்தும்.

பத்தாவது ஜனாதிபதி தேர்தலுக்கு இடையிலே நிரந்தர அரசியல் தீர்வை முன்வைப்பதற்கான ஒரு நடவடிக்கையை அவர்கள் எடுப்பதற்கான வாய்ப்பு இருக்கின்றது. அதற்கு அப்பால் சிதறி கிடக்கின்ற எமது தமிழ் தேசிய கட்சிகளை ஒரு குடையின் கீழ் கொண்டு வருவதற்கு ஒரு முன்னேற்பாடாகவும் தமிழ் தேசிய பொது கட்டமைப்பு எடுத்து இருக்கின்ற முயற்சி என்பது பயனளிக்கும்.

ஆகவே தமிழ் மக்களாகிய நீங்கள் செய்ய வேண்டிய ஒரே விடயம் கடந்த ஜனாதிபதி தேர்தலிலே பலருக்கு வாக்களித்து இருக்கின்றோம், பேசியிருக்கின்றோம், ஏமாந்தும் இருக்கின்றோம், ஆகவே இம்முறை நாங்கள் கூறுகின்ற விடயம் ஜனாதிபதியாக ஒரு தமிழர் ஜனாதிபதியாக வர முடியாது என்றாலும் கூட எம்மை புறக்கணித்து 13 வது அரசியல் திருத்தத்தை கூட செய்யாது, யுத்த குற்றத்திற்கு சர்வதேச விசாரணை செய்யாமல் உள்ள நிலையில் இந்த தேர்தலில் தமிழ் மக்கள் தமிழ் பொது வேட்பாளருக்கு ஆதரவு வழங்க வேண்டும் எனத் தெரிவித்தார்.



# வாக்காளர் அட்டை விநியோகம் 30 வீதம் பூர்த்தி செய்யப்பட்டது

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் 30 வீதம் வரை நிறைவு செய்யப்பட்டுள்ளன என தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இன்று ஞாயிற்றுக்கிழமை வாக்காளர் அட்டைகளைப் பகிர்ந்தளிப்பதற்கான விசேட தினமாக அறிவிக்கப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பிரதி தபால் மாஅதிபர் ராஜித ரணசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, இன்று காலை 08 மணி முதல் மாலை 06 மணி வரை வாக்காளர் அட்டைகளைப் பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

SRI LANKA POST

அத்துடன், எதிர்வரும் 14 ஆம் திகதி வரை வாக்காளர் அட்டைகளை வீடுகளுக்கே சென்று பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுமென சிரேஷ்ட பிரதி தபால் மா அதிபர் ராஜித ரணசிங்க குறிப்பிட்டுள்ளார்.

# வாக்குச்சீட்டுகளை அச்சிடும் பணிகளில் 50 வீதம் நிறைவு என்கிறது அரச அச்சகம்

ஜனாதிபதித் தேர்தலுக்கான உத்தியோகப்பூர்வ வாக்குச்சீட்டுகளை அச்சிடும் பணிகள் 50 வீதம் வரை நிறைவடைந்துள்ளன என அரச அச்சகம் தெரிவித்துள்ளது.

அச்சிடப்பட்டுள்ள வாக்குச்சீட்டுகள் தேர்தல் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என சிரேஷ்ட அதிகாரியொருவர் கூறியுள்ளார்.



உத்தியோகப்பூர்வ வாக்குச்சீட்டுகளை அச்சிடும் பணிகளை அடுத்த வாரத்திற்குள் நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளதாக அரச அச்சகம் குறிப்பிட்டுள்ளது.

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் ஒரு கோடியே 71 லட்சத்து 40 ஆயிரத்து 354 பேர் வாக்களிக்க தகுதிபெற்றுள்ளனர்.

# சகல மதத்தினரின் உரிமைகளும் பாதுகாக்கப்படும்

## ஜனாதிபதி ரணில் உறுதி



"அரசமைப்பின் பிரகாரம் இலங்கையிலுள்ள அனைத்து மதத்தினரின் உரிமைகளையும் பாதுகாப்பதற்கு அரசு அர்ப்பணிப்புடன் செயற்படும். நாடு எதிர்நோக்கும் தற்போதைய சவால்களை எதிர்கொள்வதில் ஆன்மீக வழிகாட்டலை உறுதிப்படுத்துவதற்கு அனைத்து மதங்களினதும் தொடர்ச்சியான ஒத்துழைப்பு அவசியம்."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற இலங்கையின் அப்போஸ்தலிக்க ஆயர் பதவிப் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சுதந்திய கிறிஸ்தவ தேவாலயங்களுக்கான தேசிய ஒருங்கிணைப்பாளர் கலாநிதி கர்பி டி லெனரோல் ஆயர் தலைமையில் 160 மாணவர்களுக்கு பதவிகளும் பட்டங்களும் வழங்கப்பட்டன.

நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலிருந்தும் இருந்து சுமார் 800 இலங்கை அப்போஸ்தலிக்க பாதிரிமார்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சில மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி வைத்தார்.

இன, மத விடயங்களை அடிப்படையாக கொண்டு தாம் தேர்தல் பணிகளை நடத்துவதில்லை எனவும், மதத்தை எப்போதும் அரசிலிருந்து பிரித்து வைத்து, அனைத்து மதத்தினருக்கும் சம வாய்ப்புகளை வழங்குவதே தமது நோக்கம் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இலங்கையிலுள்ள அனைத்து மத மக்களும் அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து கவனம் செலுத்திய ஜனாதிபதி, டிஜிட்டல் மற்றும் தொழில்நுட்ப யுகத்தில் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் வாய்ப்புகள் குறித்தும் சுட்டிக் காட்டினார்.

சர்வதேச சுதந்திர அப்போஸ்தலிக்க மறைமாவட்ட ஆயர் பேரவையின் சிடொனின் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கலாநிதி கிர்பி டி. லனரோல் அருட்தந்தைக்கு வாழ்த்துத் தெரிவித்து தனது உரையை ஆரம்பித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கடந்த தசாப்தத்தில் அப்போஸ்தலிக்க ஆயர் பீடத்துக்கு அருட்தந்தை லனரோல் ஆற்றிய பங்களிப்பையும் பாராட்டினார்.

நாட்டில் நிலவும் சமூகப் பொருளாதார நிலைமை குறித்து கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, மத விவகாரங்களில் கவனம் செலுத்துவதற்கு முன்னர் மக்களின் அடிப்படைத் தேவைகளுக்குத் தீர்வு காண்பதன் முக்கியத்துவம் குறித்தும் விளக்கமளித்தார்.

இலங்கையில் கிறிஸ்தவ சமூகத்தின் வெற்றிகளைப் பாராட்டிய ஜனாதிபதி, இயேசு கிறிஸ்துவின் போதனைகள் பல நூற்றாண்டுகளாக நாட்டில் எதிரொலிப்பதாகக் குறிப்பிட்டார்.

தமது மதத்தைக் கடைப்பிடிக்கும் சுதந்திரத்தைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தையும் அனைத்து மதத்தினருக்கும் சமமான வசதிகளை வழங்க வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

மத நடைமுறைகளின் எதிர்காலம் குறித்தும் இதன்போது கவனம் செலுத்திய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஒழுங்கமைக்கப்பட்ட மதங்களில் டிஜிட்டல் யுகம் மற்றும் செயற்கை நுண்ணறிவின் தாக்கம் என இரண்டு முக்கிய சவால்களைச் சுட்டிக்காட்டினார்.

குறிப்பாக டிஜிட்டல் ஊடகங்களால் பாதிக்கப்படும் இளைஞர்களுக்கு உளவியல் ரீதியான வழிகாட்டல்களை வழங்குவதன் முக்கியத்துவம் குறித்தும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, இளைஞர்கள் தொடர்பான அண்மைக்கால பிரச்சினைகளுக்குரிய நிகழ்வுகளை எடுத்துரைத்துடன், இப்பிரச்சினைகளைத் தீர்க்க மத மற்றும் சமூகத் தலைவர்களின் அவசியத்தை வலியுறுத்தினார்.

எதிர்வரும் காலங்களில் அனைவரும் ஒன்றிணைந்து இந்த விடயத்தைக் கருத்தில்கொண்டு செயற்படுவதே சிறந்தது எனவும், மதப் பின்னணி எதுவாக இருந்தாலும் அனைத்து மக்களின் தேவைகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.












# தமிழரசுக் கட்சியின் சஜித்துக்கான ஆதரவு சொல்லும் செய்தி!



புருஜோத்தமன் தங்கமயில்

எதிர்பார்க்கப்பட்டது மாதிரியே, ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதாக இலங்கைத் தமிழரசுக் கட்சி அறிவித்துவிட்டது. வவுனியாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கூடிய தமிழரசுக் கட்சியின் மத்திய குழு, இந்த முடிவை எடுத்தது. ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற அடையாளத்தோடு ஒருவரை நிறுத்துவதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்ட தருணம் முதல், அந்த முயற்சிகளுக்கு எதிராக தமிழரசுக் கட்சியின் மத்திய குழு இருந்தது. இறுதியாக நடைபெற்ற நான்கு, ஐந்து மத்திய குழுக் கூட்டங்களில், பெரும்பான்மையான உறுப்பினர்கள், பொது வேட்பாளர் என்ற விடயத்தை பலமாக விமர்சித்தார்கள். ஒருசிலர் மாத்திரமே, அதற்கு ஆதரவான நிலைப்பாட்டில் இருந்தார்கள். அவர்களும்கூட அதற்காக மத்திய குழுவுக்குள் வாதிடும் நிலையில் இருக்கவில்லை. மாறாக, தங்களின் நிலைப்பாட்டினை கூட்ட அறிக்கையில் பதிவு செய்வதோடு ஒதுங்கிவிடும் நிலையிலேயே இருந்தார்கள். ஆரம்பம் முதலே, தமிழரசுக் கட்சியின் மத்திய குழு, பிரதான வேட்பாளர்களில் ஒருவரை ஆதரிக்கும் என்பது அப்பட்டமாக தெரிந்தது. அதற்கான பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டும் என்றும் தீர்மானங்களை எடுத்தது. அதன்போக்கில், இறுதியாக நடைபெற்ற மத்திய குழுக் கூட்டத்தில், சஜித்தை ஆதரிப்பதாக தீர்மானத்தை எடுத்து அறிவித்திருக்கின்றது.

தமிழரசுக் கட்சியின் இறுதி மத்திய குழுக் கூட்டத்தில் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா சுகயீனம் காரணமாக கலந்து கொள்ளவில்லை. கட்சியின் புதிய தலைவராக தேர்வாகி நீதிமன்ற உத்தரவுகளினால் பதவியேற்காத சிவஞானம் சிறீதரன், பிரித்தானியாவிலுள்ள பிள்ளையார் கோயிலொன்றின் தேர்த் திருவிழாவில் பங்கேற்பதால், மத்திய குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டிருக்கவில்லை. அதனை அவர், கட்சியின் பதில் செயலாளருக்கு கடிதம் மூலம் அறிவிக்கவும் செய்தார். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீநேசன் உள்ளிட்ட சிலர் தனிப்பட்ட காரணங்களினால் மத்திய குழுக் கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாது என்று கட்சிக்கு அறிவித்திருக்கிறார்கள். தமிழரசுக் கட்சியின் நிறுவனரான தந்தை செல்வா, கட்சிக்கான யாப்பினை வரையும் போது, ஒருபோதும் தமிழரசுக் கட்சி எந்தவொரு குடும்பத்தினதும் தனிச்சொத்தாக மாறிவிடக் கூடாது என்பதை கருத்தில் கொண்டார். அந்தப் படிப்பினையை அவருக்கு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸும், ஜீ.ஜீ.பொன்னம்பலமும் வழங்கியிருக்கலாம். அதனால், தமிழரசுக் கட்சியின் தீர்மானங்களை எடுக்கும் அதிகாரத்தை மத்திய குழுவுக்கு வழங்கி யாப்பை வரைந்தார். மத்திய குழுவின் 11 உறுப்பினர்கள் கலந்து கொண்டால், அந்தக் கூட்டம் அங்கீகாரம் பெற்றது. அதாவது, மத்திய குழுக் கூட்டத்தை கூட்டினால், குறைந்தது 11 உறுப்பினர்கள் கலந்து கொண்டால் மாத்திரமே, அந்தக் கூட்டம் முடிவுகளை எடுக்கும் அதிகாரமுள்ள கூட்டமாக அங்கீகாரம் பெறும். இறுதியாக நடைபெற்ற மத்திய குழுக் கூட்டத்தில், 29 மத்திய குழு உறுப்பினர்கள் பங்கேற்று, தீர்மானத்தை எடுத்திருக்கிறார்கள்.

சஜித்தை ஆதரிப்பதாக மத்திய குழு தீர்மானத்தை எடுத்து அறிவித்தும், அதற்கு எதிராக மாவை 'கலகக்குரல்' எழுப்பினார். தனக்குத் தெரியாமல், தீர்மானத்தை எடுக்க முடியாது என்று ஊடகமொன்றிடம் கூறினார். ஆனால், அந்தக் கலகக் குரலை 15 மணி நேரங்களிலேயே கைவிட்டு, 'மத்திய குழுவின் தீர்மானத்தை அனைவரும் இணைந்து செயற்படுத்துவோம்' என்று கூறிவிட்டு அமைதியாகிவிட்டார். அந்த மாற்றத்தை அவரில் விதைத்தது யார், என்ற கேள்வி எழுகின்றது. அவரின் மாற்றத்துக்கு அக - புற - அயலக அழுத்தங்கள் காரணமாக இருக்கலாம். அகம் என்பதற்கு 'வீடு' என்றும் பொருள் உண்டு. அந்த வீடு அவரின் சொந்த வீட்டுக்குள் இருந்து விடுக்கப்பட்ட அழுத்தமா என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டியிருக்கின்றது. ஏனெனில், மாவையின் மகன் ஒருவர், சஜித்தோடு நிற்கும் படத்தினை இணையப் பத்திரிகையொன்று வெளியிட்டு, சஜித்தை ஆதரிக்கும் தமிழரசுக் கட்சியின் தீர்மானத்துக்குப் பின்னால், தாங்கள் இருப்பது

தொடர்ச்சி▼



# தமிழரசுக் கட்சியின் சஜித்துக்கான ஆதரவு சொல்லும் செய்தி!

தொடர்ச்சி▲

மாதிரியாக உரிமை கோரல்களை செய்திருந்தது. தமிழரசுக் கட்சியின் சின்னம் வீடு(அகம்). அதன் யாப்பு விதிகளை மாவை எடுத்து நோக்கி (அல்லது யாராவது எடுத்துக் கூறி) விளக்கியதும், தன்னுடைய கலகக்குரல் எடுபடாது என்றும் அதனைக் கைவிட்டாரோ தெரியாது.

தமிழரசுக் கட்சி இன்னமும் எந்தவொரு குடும்பத்தினதும் தனிச் சொத்தாக மாறாமல் இருப்பதற்கும் - வாழ்நாள் தலைவர்களை பிரசவிக்காமல் இருப்பதற்கும் - கட்சியின் யாப்புதான் அடிப்படை. அதன் முன்னால், அனைவரும் சமமானவர்கள். மத்திய குழு என்று வந்துவிட்டால், அதற்குள் தலைவருக்கும், நாடாளுமன்ற உறுப்பினருக்கும் கூட இன்னொரு மத்திய குழு உறுப்பினருக்கான அதிகாரம்தான். அந்த மத்திய குழுக் கூட்டத்தில், எது பெரும்பான்மைத் தீர்மானமோ, அதுதான் கட்சியின் முடிவு. அதுபோக, ஜனநாயகக் கட்சியாக இருப்பதனால், தமிழரசுக் கட்சிக்குள் அடிக்கடி கலகக்குரல்கள் எழுவதுண்டு. அதனை எழுப்பியவர்கள், கட்சிக்குள் தொடர்ந்தும் நீடிப்பதுமுண்டு. இப்போது, தலைவர் கலகக்குரல் எழுப்பினார். அவ்வளவுதான். இன்னொரு பக்கம், தமிழரசுக் கட்சியின் சஜித்தை ஆதரிக்கும் தீர்மானத்துக்கு எதிராக தமிழ்ப் பொது வேட்பாளர் ஆதரவுக் குழுவினரே பொங்கினார்கள். முதல் நாளில், தீர்மானத்துக்கு எதிராக பேசிய மாவையை, 'மாவீரன்' என்ற வர்ணித்து எழுதினார்கள். ஆனால், அவர் தனது முடிவை மாற்றிக் கொண்டதும், மாவை மீது அபாண்டமான பழிகளைச் சுமத்தி தங்களின் கோபங்களை வெளிப்படுத்தினார்கள்.

தமிழரசுக் கட்சிதான் இன்னமும் தமிழ்த் தேசிய அரசியலில் முதன்மைக் கட்சி. எப்போதுமே அந்த இடத்தினை அந்தக் கட்சி இழக்க விரும்பாது. அப்படியான நிலையில், அந்தக் கட்சிக்கென்று பொறுப்பு அதிகம். தென் இலங்கையில் யார் ஆட்சியில் அமர்ந்தாலும் அவர்களோடு பேசுவதற்கான அங்கீகாரத்தை - ஆணையை - பெற்றவர்கள் என்ற நிலையில், தமிழரசுக் கட்சி தன்னை முன்னிறுத்தியாக வேண்டும். அது, மக்களின் மனநிலைகளையும் உள்வாங்கி பிரதிபலிக்க வேண்டும். அதன் பிரகாரம், இம்முறையும் சஜித்தை ஆதரிப்பதற்கான தீர்மானத்தை எடுத்திருக்கின்றது. 2019ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் சஜித்தை நோக்கியே தமிழ் மக்களின் வாக்குத் திரட்சி இருந்தது. அப்போதும், தமிழரசுக் கட்சி சஜித்தையே ஆதரித்திருந்தது. இரா.சம்பந்தன், மாவை, எம்.ஏ. சுமந்திரன், சிறீதரன் தொடங்கி தமிழரசுக் கட்சி உள்ளடங்கிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சஜித்துக்காக பிரச்சாரத்தை முன்னெடுத்தும் இருந்தனர். இம்முறையும் சஜித்தை நோக்கிய தமிழ் மக்களின் திரட்சியே பெருமளவு இருக்கும். தமிழரசுக் கட்சிக்கு சஜித்தை விட்டால் வேறு தெரிவுகள் கண்முன்னால் இல்லை. ரணிலை ஆதரிப்பதற்கான எந்த வாய்ப்பும் இல்லை. டக்ளஸும், பிள்ளையானும், வியாழேந்திரனும், அங்கஜனும் ரணிலோடு இருக்கிறார்கள். அவர்களோடு கலப்பதற்கு தமிழரசுக் கட்சி விரும்பாது. அப்படிக் கலந்தால், எதிர்காலத்தில் தமிழரசுக் கட்சி தமிழ்த் தேசியக் கட்சியாக தன்னை முன்னிறுத்துவதில் சிக்கல்களைச் சந்திக்க வேண்டியிருக்கும். அநுரகுமார திசாநாயக்கதை ஆதரிப்பதற்கும், தமிழரசுக் கட்சியினால் முடியாது. ஏனெனில், வடக்கு கிழக்கு பிரிப்பு மற்றும் இறுதி யுத்தத்தில் ராஜபக்ஷக்களோடான நெருக்கமும்

தொடர்ச்சி▼



# தமிழரசுக் கட்சியின் சஜித்துக்கான ஆதரவு சொல்லும் செய்தி!

தொடர்ச்சி▲

இராணுவத்திற்கு ஆள்களைச் சேர்ப்பதற்கான ஜே.வி.பியின் பங்களிப்பையும் தமிழ் மக்கள் இன்னமும் மறக்கவில்லை. இருப்பதில், பாதிப்புக் குறைந்தது சஜித்தை ஆதரிப்பது என்ற தெரிவுதான், அதனையே, அந்தக் கட்சி எடுத்திருக்கின்றது.

நல்லாட்சிக் காலம் முதல் ஒத்திவைக்கப்பட்டு வந்திருக்கின்ற மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கான, தனிநபர் பிரேரணையை நாடாளுமன்றத்துக்குள் அனுமதிப்போம் என்று ரணில் அண்மைக் காலத்தில் கூறிவந்தார். அந்தப் பிரேரணையை இரண்டாவது வாசிப்பு வரையில் நாடாளுமன்றத்துக்குள் நிறைவேற்றவும் செய்தார். ஆனால், தமிழரசுக் கட்சி சஜித்தை ஆதரிப்பதாக அறிவித்ததும், மூன்றாவது வாக்கெடுப்பை நடத்தாது, பிரேரணையை ஒத்திவைத்துவிட்டார். இதுதான், ரணிலின் அரசியல் நேர்மை. ஏற்கனவே, தமிழ் மக்களின் வாக்குகள் சஜித்துக்கு திரள்வதைத் தடுப்பதற்காக வடக்கு கிழக்கில் பல நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு சாராயக் கடைகளுக்கான அனுமதிப்பத்திரத்தை ரணில் அரசாங்கம் வழங்கியிருப்பதாக குற்றஞ் சாட்டப்படுகின்றது. அதனைப் பெற்றவர்களில் சிலர் ரணிலை வெளிப்படையாக ஆதரிக்கிறார்கள். இன்னும் சிலரோ, சஜித்துக்கு செல்லும் வாக்குகளை தடுப்பதற்காக தமிழ்ப் பொது வேட்பாளர் என்ற விடயத்துக்கு பின்னால் நிற்கிறார்கள் என்று தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் குற்றஞ் சாட்டப்பட்டது. அதுபோல, கடந்த காலத்தில் தென் இலங்கை அரசோடும் அதன் மூர்க்கக் கருவியான இராணுவத்தோடும் இணைந்து இயங்கியவர்கள் பலர், தமிழ்ப் பொது வேட்பாளர் கோசத்துக்குப் பின்னால் இருக்கிறார்கள் என்பதை வரலாறு பதிவு செய்கின்றது. அப்படியான நிலையில், தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தின் மீது, 'ரணிலின் பினாமி அடையாளமும் - சாராயக் கடைக்கான அனுமதிக்காரர்களும் இருக்கிறார்கள்' என்ற வாதத்தை புறந்தள்ளுவது அவ்வளவு இலகுவானது அல்ல.

தமிழரசுக் கட்சியின் சஜித்துக்கான ஆதரவுத் தீர்மானத்தை விமர்சித்த சிலர், நல்லூர் முருகன் தேர்த் திருவிழா நடைபெறும் நாளில், மத்திய குழுக் கூட்டம் நடைபெற்றதாக வாதிடுகிறார்கள். தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டம் தலைவருக்கு அறிவிக்காமல் ஒருபோதும் கூட்டப்படுவதில்லை. கூட்டத்தின் திகதி, தலைவரோடு பேசித்தான் தீர்மானிக்கப்பட்டு, கட்சியின் செயலாளரினால் உறுப்பினர்களுக்கு கடிதங்களினூடு அறிவிக்கப்படும். அதுபோக, ஆடி, ஆவணி மாதங்களில் கோயில்களில் திருவிழாக் காலம். அதனைக் காட்டி , அரசியல் தீர்மானங்கள் எடுப்பதை ஒத்திவைக்க வேண்டும் என்று வாதிடுவது அபத்தமானது. நாட்டில், முக்கியமானதொரு தேர்தல் நடைபெறும் போது, அதுவும் தமிழ் மக்களின் முதன்மைக் கட்சியான தமிழரசுக் கட்சி, கோயில் - தேவாலாய -பள்ளிவாசல் நிகழ்வுகளைக் காட்டி ஒதுங்க வேண்டும் என்று கோருவது அரசியல் அறிவுள்ள - அறமுள்ள யாரும் செய்ய மாட்டார்கள். நல்லூர் தேர்த் திருவிழாவைக் காட்டி கட்சியின் தீர்மானத்தை கேள்விக்குள்ளாக்கும் நபர்களுக்குப் பின்னால், மதவாத - சாதியவாத குழப்பங்களை தோற்றுவிக்கும் எண்ணம் இருப்பதாகவே கொள்ள வேண்டும். கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தைத் தாண்டி, தேர்த்திருவிழா முக்கியமானது என்றால், சம்பந்தப்பட்டவர்கள் சிறீதரன் போன்று, தனது தீர்மானத்தை கடிதங்கள் மூலமாவது கட்சிக்கு அறிவித்திருக்க வேண்டும். (ஏனெனில், அவரும் தேர்த் திருவிழாவுக்குத்தான் பிரித்தானியா சென்றிருக்கிறார்.) அதனையும் செய்யாது ஒழித்தோடுவது அரசியல் திரணியற்ற நிலை.

தமிழரசுக் கட்சி, ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் தன்னுடைய தீர்மானத்தை தமிழ் மக்களிடம் முன்வைத்துவிட்டது. அந்தத் தீர்மானம் ஏன் எடுக்கப்பட்டது, அதற்கான தர்க்க ரீதியான காரணங்கள் என்ன என்பதை, அந்தக் கட்சி மக்களிடம் எடுத்துக் கூற வேண்டும். அதனை ஏற்பதும், ஏற்காமல் விடுவதும் மக்களின் முடிவு. இங்கு இறுதி முடிவை மக்களே எடுக்கிறார்கள். அதனைத்தான் ஜனநாயகம் பிரசவிக்கின்றது. இல்லாது, மக்களை ஒரே முனையில் தள்ளுவதற்கு இதுவொன்றும் ஆயுதமுனை அரசியல் அல்ல. அப்படியான சிந்தனையோடு இன்னமும் தமிழ்த் தேசிய அரசியலுக்குள் பலரும் இருக்கிறார்கள். தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்துவதன் மூலம், தங்களின் முடிவுகளின் முன்னால் தமிழரசுக் கட்சி அடிபணியும் என்று பொதுக் கட்டமைப்பின் கட்சிகளும், அரசியல் பத்தியாளர்களும் வெளிப்படையாக கூறியிருக்கிறார்கள். அந்த மனநிலையில் நின்று அரசியலை அணுகும் தரப்பினருக்கு, தமிழரசுக் கட்சியின் ஜனநாயகத்தன்மையுள்ள அரசியல் அணுகுமுறை எரிச்சலூட்டுவது இயல்பானது.




# கிருசாந்தி குமாரசாமியின் நினைவேந்தல் நேற்று செம்மணித் தரவைப் பகுதியில்!

யாழ்ப்பாணம் செம்மணிப் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட சுண்டுக்குளி மாணவி குமாரசாமி கிருசாந்தியின் 28 ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று மாலை செம்மணி பகுதியில் இடம்பெற்றது.

இதன்போது செம்மணிப் பகுதியில் படுகொலை செய்யப்பட்ட – அங்கு புதைக்கப்பட்ட ஏனையவர்களும் நினைவு கூரப்பட்டு, அவர்களுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

செம்மணிப் படுகொலை நினைவேந்தல்பேரவையின்தலைவர்கிஷோர் தலைமையில் நேற்று மாலை நினைவேந்தல் இடம்பெற்றது.

இந்த நினைவேந்தலில் சாவகச்சேரி பிரதேச சபையின் முன்னாள் உபதவிசாளர் மயூரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

1996 ஆம் ஆண்டு செம்டம்பர் மாதம் 7ஆம் திகதி 18 வயதுடைய யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருஷாந்தி வீதியால் சென்று கொண்டிருந்த போது, செம்மணி பகுதியில் இராணுவத்தினரால் வழிமறித்து பாலியல் வன்கொடுமைக்குட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

கிருஷாந்தியை, செம்மணி இராணுவ முகாமில் தடுத்து வைத்திருந்ததை பிரதேச மக்கள் அவதானித்ததையடுத்து மாணவியின் தாயாரிடம் கூறியுள்ளனர்.

இதனையடுத்து, மாணவியின் தாயாரான ஆசிரியை குமாரசாமி இராசம்மா, மாணவியின் சகோதரன், குமாரசாமி பிரணவன் மற்றும் மாணவியின் வீட்டுக்கு அயல் வீட்டில் வசிக்கும் தென்மராட்சி பல நோக்கு கூட்டுறவு சங்கத்தில் உதவியாளராக கடமையாற்றிய சிதம்பரம் கிருபாமூர்த்தி ஆகியோர் மாணவியை தேடி சென்று செம்மணி இராணுவ முகாமில் விசாரித்துள்ளனர்.

அதனையடுத்து மாணவியைத் தேடிச் சென்ற மூவரையும் இராணுவத்தினர் படுகொலை செய்தனர் எனவும் கூறப்படுகின்றது.

அன்றைய தினம் நள்ளிரவு படுகொலை செய்யப்பட்ட நால்வரின் உடல்கள் செம்மணி பகுதியில் உள்ள வயல் வெளியில் புதைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.





# தன்னிலையிழந்த தமிழரசும் பொதுக் கட்டமைப்பின் தேர்தல் அறிக்கையும்!

மிகவும் பரிதாபகரமான கட்டத்திக் தமிழர் அரசியல் நிலையிழந்து தறிகெட்டுப்போன தற்குறிகளில் சிக்கித் தவிக்கிறது. யாரை, யார் நொந்து கொள்வது? காலக் கணக்கின் தவறா? இல்லையேல் கருப்பொருள் அற்ற ஆதாய சூதாடிகளின் தீர்க்கதரிசனமற்ற செயலா? காலத்தால் கரைந்து போகின்ற நிலையே ஏற்படுகிறது. தொலைதூர நோக்கு நிலையின்றி, இன விடுதலை பற்றிய எவ்விதமான புரிதலுமின்றி, வழிப்போக்கர்களாய் தீர்மானம் எடுக்கும் சந்தர்ப்பவாத அரசியல் சகதிக்குள் தமிழர் அரசியல் சதிராட்டம் போடுகிறது. குறைந்தபட்சம் சன சமூக நிலையத்தின் பொறுப்பு கூட தமிழ்த்தேசிய கட்சிகளிடம் இல்லை. தமிழர் அரசியலை வழிநடத்துகின்றோம் என ஊர் எல்லாம் ஊளையிடும் கட்சிகளிடம் எந்தப் பொறுப்புக் கூறலும் இருப்பதில்லை.

இழப்பதற்கு எதுவும் இல்லாத அளவுக்கு இழந்து ஏதிலியாய் வாழ்க்கை நடத்தும் இனத்தை சமூகப் பொறுப்போடும் மக்கள் நலன் அக்கறையோடும் அப்பழுக்கற்ற தூய நோக்கில் மக்கள் நலன் சார்ந்த தீர்மானங்களை எடுக்கக்கூடிய வல்லாளுமையுள்ள தலைமையின் இடைவெளி இந்தத் தேர்தலின் மூலம் சந்தேகத்துக்கு இடமின்றி வெளிப்படுகிறது. முன்னாள் ஆயுதக் குழுக்கள் இடமும் சமூகப் பொறுப்பை காணவில்லை. தமிழரசு கட்சியில் மூன்று அணிகளாக பிரிந்து நிற்கின்றபோதும் கூட, மக்களினுடைய உணர்வுகளைப் பிரதிபலிக்கக்கூடிய தீர்மானத்தைத் திடமாக, எந்த நியாயாதிக்க கோட்பாட்டை மேற்கொள்ளக்கூடிய வகையில் ஆளுமை செலுத்தி நகர்த்திருக்க வேண்டிய விடயத்தை, பொறுப்பற்ற விதத்திலே தனி மனிதர்களாக எடுக்கப்பட்ட தீர்மானம் இந்த இனத்தின் எதிர்காலத்தை கேள்விக்கு உட்படுத்தப் போகிறது.

2010 ,2015, 2019 மூன்று ஜனாதிபதி தேர்தல்களிலும் எதிர்பார்த்த எதுவும் நிறைவேறாவிட்டாலும் கூட, நிதானமான அணுகு முறையைப் பின்பற்றி, ஆதரிக்கின்ற நிலைப்பாட்டை விமர்சனங்களைக் கடந்தும் நிர்ணய நிலையை உருவாக்கி நகர்த்தினர். அதில் சரி, தவறு இருக்கலாம். ஒரு கட்சியாக தேர்தல்களிலே மக்களுக்கு அந்த மக்களின் உணர்வுகளின் அடிப்படையில் தீர்மானத்தை மேற்கொண்டு, வழிகாட்ட வேண்டியது அரசியல் கட்சிகளினுடைய தலையாய பொறுப்பு. அதை நிறைவேற்றாவிட்டால் கட்சிகளாக இருப்பதில் எந்த விதமான அர்த்தமும் கிடையாது. ஜனநாயகத்தில் அரசியல் கட்சிகளின் வகிபாகம் அதிமுக்கியத்துவமானது.



வி.எஸ்.சிவகரன்

ஆனால் விடுதலை அரசியலில் எவ்வாறான வழிமுறைகளை பின்பற்ற வேண்டும், அதனுடைய ஒழுங்கு முறைகள், அந்தந்தக் காலத்துக்கு ஏற்றது போல் நின்று, நிலைத்து, நிதானித்து செயல்படக்கூடிய விடயங்கள் ஏதாவது பின்பற்றப்பட்டுள்ளதா என்பது பற்றி எவருக்கும் பதில் தெரியவில்லை.

சுமந்திரன் என்ன பேசினார், ஏது பேசினார் என்று கட்சித் தலைமை உட்பட எவருக்கும் தெரியாது. உண்மையிலும் பேசினாரா என்பது கூட புரியவில்லை என்கிறார் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா. ஆனால் முதிர்ந்த நிலையில் உள்ள தமிழரசுக் கட்சி தான்தோன்றித்தனமாக, குழு தீர்மானம் இன்றி, சஜித் பிரேமதாசாவை ஆதரிக்க முன் வந்தது என்பது இலகுவாக கடந்து போய்விடக் கூடிய விடயம் அல்ல. கட்சியினுடைய மூத்த உறுப்பினர்கள் ஒரு குழுவாக இணைந்து தீர்க்கப்படக்கூடிய அத்தியாவசிய பிரச்சனைகளையாவது உரையாடி இணக்கம் ஏற்படுத்தியிருக்க வேண்டும். அதிகார பகிர்வு என்பது ஒரு தேர்தல் கால வாக்குறுதியாகவே போய் விடுகிறது. கூட்டத்திற்கு போன 26 பேரும் - அமாவாசையில் பிறந்த அரிஸ்டோட்டில்களும் - இந்த இனத்தை எந்தவிதமான தொலைநோக்குப் பார்வையும் இன்றி அனாதைகள் போல் விலையின்றி விற்று விட்டார்கள். இந்தப் பரிதாபகரமான நிலை கடந்த எந்த தேர்தல்களிலும் ஏற்பட்டதில்லை. அது ஒரு கட்சியின் ஒட்டுமொத்த முடிவாகவும் வெளிப்படுத்தப்படவில்லை என்றால் எங்கோ ஓரிடத்தில் தவறு இருக்கிறது என்பதனை ஏனையவர்கள் உணர்ந்து கொண்டிருக்க வேண்டும். ஆனால் சில அடிப்பொடிகளை (செம்புகள்) வைத்து சுமந்திரன் அவர்கள் இவ்விதமான ஒரு தீர்மானத்தை எடுத்திருக்கிறார் என்பது இனத்தின் மிக மோசமான நிலையாகும். ஒரு கட்சியாக அவர்கள் தீர்மானிப்பது தவறல்ல. ஆனால் ஏன், எதற்கு, எப்படி, என்ன காரணம், அந்தக் காரணத்தை அடையக்கூடிய வழி என்ன, அந்த வழியில் தடையாக உள்ளதை நீக்கக்கூடிய வல்லமை கிடைக்குமா என்கின்ற வாதப்பிரதிவாதங்களை ஆதரிப்பதற்கு முன்பதாக ஒரு குழுவாகஒ பேசி குறைந்தபட்சமேனும் அத்தியாவசிய பிரச்சினைகளுக்கு தீர்வு என்ன

தொடர்ச்சி▼



# தன்னிலையிழந்த தமிழரசும் பொதுக் கட்டமைப்பின் தேர்தல் அறிக்கையும்!

தொடர்ச்சி▲

என்பதனை முடிவுறுத்தியிருக்க வேண்டும். வெளிப்படையாக அதிகாரப் பகிர்வு பற்றி பேசினால் தெற்கின் வாக்குகளை பெற முடியாது என்கின்ற காரணத்தினால் எதுவுமே பேசாமல் பெறுமதியின்றி தமிழினத்தை பொறுப்பின்றி விற்பதற்கு இவர்களுக்கு அதிகாரம் கொடுத்தவர்கள் யார்?

தமிழ் மக்கள் இன்னும் இவர்களை நம்பி இருக்கிறார்களா எனப் பலர் கேள்வி எழுப்புகிறார்கள். சுமந்திரனைச் சூழ உள்ளவர்கள் அறிவு பூர்வமாக செயல்படக்கூடியவர்களாக தெரியவில்லை எனப் பலரது விமர்சனம் உண்டு. அவ்விதமான சூழலில் எப்படி சுமந்திரனால் நிதானமான முடிவை எடுக்க முடியும்? தமிழரசுக் கட்சி பல பிரிவுகளாக உடைந்து போய் உள்ள நிலையில் இவர்களிடம் திரட்சியான வாக்கு வங்கி இல்லை என தென்னிலங்கை கட்சிகள் புரிந்து கொண்டதால்தான் இவர்களை ஒரு பொருட்டாக மதித்து உத்தியோகபூர்வ உரையாடலை மேற்கொள்ளவில்லை என்றே புலப்படுகிறது. கடந்த 14 ஆண்டுகளாக சுமந்திரனால் எடுக்கப்பட்ட எந்தத் தீர்மானமாவது இலக்கு நோக்கி நகர்ந்ததாக தெரியவில்லை. விதைத்தவை அதிகம். அறுவடை செய்தவை என்ன என்னும் கேள்வி உண்டு.

மாகாண சபைச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிய பின்னர் யாரை ஆதரிக்கலாம் என்ற தீர்மானத்திற்கு வந்திருக்கலாம். அரசியலுக்கு அறிவு மட்டுமல்ல. தந்திரமும், விளைவை முன்கூட்டியே உணர்தல் திறனும் மிக அவசியம். கடந்த கால முடிவுகளால் விளைந்த பயன் என்ன என்பதை சுமந்திரன் மறு வாசிப்புச் செய்ய வேண்டும். தவறுகளில் இருந்து பாடம் கற்றுக் கொள்ளாமல் எந்த தலைமையும் தம்மை தகவமைத்துக் கொள்ள முடியாது. நிலை நிறுத்தவும் இயலாது. 'நா காப்பது அவசியம்'.பொது வாழ்வுக்கு சகிப்புத்தன்மை அதைவிட அவசியம். சம்பந்தரின் நிழலாக இருந்தும் கூட பல விடயங்களை அவர் கற்றுக் கொள்ளவில்லை என்பதே ஆச்சரியமாக உள்ளது.

சஜித் பிரேமதாஸவை ஆதரிக்க வேண்டும் எனும் நிலைப்பாட்டில் சுமந்திரனும் அவரது அடிப்பொடிகளும் ஆர்வமாக இருந்தனர், இருக்கின்றனர். கட்சிக்குள் மற்றொரு பிரிவு தமிழ் பொது வேட்பாளரை ஆதரிக்க கூடிய நிலை காணப்பட்டது. அதில் பலர் வெளிப்படையாக தற்பொழுதும் ஆதரித்தும் வருகின்றார்கள். பொது வேட்பாளர் ஆக முடியவில்லை என மூன்றாவது அணி இப்பொழுது வேறு விதமான நிகழ்ச்சி நிரலில் நிழலாடுகின்றது. மத்திய குழு தீர்மானத்தை காற்றில் பறக்க விட்டு விட்டு தமிழரசுக் கட்சியின் பல சிரேஷ்ட உறுப்பினர்கள் பொது வேட்பாளருக்கு பகிரங்கமாக ஆதரவு வழங்கி கூட்டங்களை நடத்துகின்றனர். அப்படியானால் கட்சியினுடைய கட்டுக்கோப்பு, அதனுடைய எதிர்கால நடவடிக்கை என்பன கேலிக்கூத்தானதாகவே காணப்படுகிறது.

தற்போதைய நிலையில் தமிழரசு கட்சியை வைத்திருப்பது யார் என்கின்ற கேள்விதான் எழுகிறது. ஏனெனில் தற்போதைய தலைவராக இருக்கக்கூடிய மாவை சேனாதிராஜா அவர்கள் சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் விடயத்தை குறைந்த பட்சம் தொலைபேசி வாயிலாகக் கூடத் தமக்குத் தெரிவிக்கவில்லை என ஆதங்கப்படுகிறார். அவர் வைத்திய சாலையில் இருந்த போது இந்திய தரப்பு அவரை அணுகியதாகவும் தகவலுக்குண்டு - சஜித் பிரேமதாஸவை ஆதரிக்கும் நிலைப்பாடு தொடர்பாக. ஆனாலும் அவர் ஒரு முடிவுக்கு வரவில்லை.

அவசர அவசரமாக ஒரு மாதத்துக்குள் மூன்று தடவை மத்திய குழுவைக் கூட்டித் தனி மனித தீர்மானத்தை கட்சித் தீர்மானம் ஆக்கிவிட்டனர். வரும் 14 ஆம் திகதி மீண்டும் மத்திய குழு கூடுகின்றது.

மாவைக்கு இது ஒன்றும் புதிய ஏமாற்றம் அல்ல. இதே வேலையைத்தான் கடந்த நாடாளுமன்றத் தேர்தல் தோல்வியின் போதும் தேசிய பட்டியல் விவகாரத்தில் இதே அணி அன்றைய பொதுச் செயலாளர் நாசகாரத்தனத்தில் ஈடுபட்டார் என விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்டு பதவியை துறந்தார். மாவையால் பதில் பொதுச் செயலாளர் பதவி கொடுக்கப்பட்டவரும், ஒரு காலத்தில் அவரின் மிகுந்த நம்பிக்கைக்குரியவராக இருந்த சுமந்திரன் அவர்களும் தனது முதுகில் குத்தி விட்டார்கள் என்று ஆதங்கப்படுகிறார் மாவை.

இன விடுதலை அரசியலிலே தன் வாழ்நாளை முழுக்க தமிழர் அரசியலுக்காக செலவழித்த ஒரு மூத்த தலைவருக்கு - அதுவும் கட்சியின் தலைவராக இருக்கின்ற போதே இவ்விதமான அவமானத்தை ஏற்படுத்தியது என்பது கட்சி ஒழுங்கு விதிகளுக்குள்ளாலும், சமூக நீதியின் இயற்கை நியதியின் அடிப்படையிலும் ஏற்புடையது அல்ல.

ஆனாலும் பைபிள் கூறுவது போல் எதனால் அளந்தீர்களோ அதனாலே அளக்கப்படுவீர்கள் என்பதைப் போல் அவரவருடைய செயல்களும் எண்ணங்களுக்கும் அடிப்படையில் தீர்ப்புக்களும் தீர்வுகளும் இடம்பெறுகின்றன. கணக்குகள் எப்பொழுதும் கூட்டல் மட்டுமல்ல கழித்தலும் இடம்பெறும். அறம் எப்போதும் நின்று கொல்வதுண்டு .கடந்த காலத்தில் இவர்கள் மற்றவர்களுக்கு எதை விதைத்தார்களோ அதனுடைய அறுவடையை இப்பொழுது அனுபவிக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் திருந்தி விடப் போவதில்லை.

சந்தர்ப்பவாதத்தில் தனது இருப்பை வலுப்படுத்த

தொடர்ச்சி▼



# தன்னிலையிழந்த தமிழரசும் பொதுக் கட்டமைப்பின் தேர்தல் அறிக்கையும்!

தொடர்ச்சி▲

விரும்பும் இந்திய தரப்பு ஒரு வல்லாளுமையற்றவரை ஜனாதிபதி ஆகிவிட்டால் கொழும்போடு இணக்கமான உறவை பேணக்கூடிய வழி ஏற்படுமென இரண்டகமாக சிந்திக்கிறது. அதன் வெளிப்பாடுதான் தமிழரசு கட்சியை வற்புறுத்தி, தமக்கு அடிமை சேவகர்களாய் எப்பொழுதும் இருப்பார்கள் என எதிர்பார்த்தது, அவர்கள் விசுவாசத்தில் விஞ்சி விட்டார்கள். மேற்கு சார்புள்ள சுமந்திரன் அவர்களும் டெல்லியின் ஆசுவாச விசுவாசத்துக்குள் அகப்பட்டு விட்டாரோ, எல்லாம் கடந்த உட்கட்சி தேர்தலின் புறச்சூழலின் விளைவுதான் என எண்ணத் தோன்றுகிறது.

ஆனாலும் இந்தியாவால் தமிழினத்திற்கு எதுவும் நன்மை நிகழ்ந்து விடக்கூடிய நிலைமை ஏற்படுமா என்பது சந்தேகமே. தங்கள் நாட்டில் உள்ள மாநிலங்களின் பிணக்குகளையே தீர்க்க முடியாமல் மொழி வழி பிணக்குகளும் மதவாத மேலாளுமையும் வன்மமாக புகுத்தும் இந்திய மத்திய அரசு, ஈழத் தமிழர்களுக்கு இதயசுத்தியாக ஒரு துரும்பை கூட தூக்கிப் போட மாட்டாது என்பது தமிழின உணர்வாளர்களின் முடிந்த முடிவு.

ஆனாலும் இவர்களின் ஏகபோக விசுவாசிகளான முன்னாள் ஆயுதக் குழுக்கள் தமிழ் வேட்பாளர் கோசத்தோடு தங்கள் எஜமானர்களுக்கு பகைமை காட்டுவது போல் மேலிடையிடுகிறார்கள். ‘உள்ளிருப்பது என்னவென்று உரியவருக்கன்று எவருக்கும் புரியாது’. சிவில் பிரமுகர்களின் நிலையும் இதுவே.

தமிழ் பொது வேட்பாளரால் வெளியிடப்பட்ட தேர்தல் விஞ்ஞாபனம் செயற்பாட்டு அறிக்கையின்றி பத்தி எழுத்து போல் உள்ளதாக பலரும் விமர்சனம் செய்கின்றனர். ‘அறப்படித்த பல்லி கூழ்பானைக்குள் விழுந்த கதை தான்’ இவர்களின் நிலை. பொது வாக்கெடுப்பும் இல்லை, சமஷ்டியையும் காணவில்லை. ஒற்றையாட்சி நிராகரப்பு தொடர்பாக தெளிவான நிலையை வெளிப்படுத்தவில்லை. பல விடயங்களை வெளிப்படையாகவும் நேரடியாகவும் கூறாமல் மறைப்பொருளில் சுற்றி வளைத்து சூழ்ச்சிகரமான எழுத்துக்களை புகுத்தி உள்ளனர். புதிதாக வியத்தகு விடயமாக எதனையும் இவர்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைக்கவில்லை. வழமையாக யாவரும் அறிந்த அத்தியாவசிய பிரச்சுனைகளையே முன்வைத்துள்ளனர். அதிகாரப் பகிர்வை அடையக்கூடிய வழி வரைபடம் எதனையும் தெளிவாக வெளிப்படுத்தவில்லை. தேர்தல் பரப்புரையில் யாவரும் ஒருங்கிணைந்து மிகப்பெரிய அளவில் முன்னெடுப்பதாக தெரியவில்லை. இதயத்தால் இணையாத அணிகள் ஒன்று சேர்ந்தால் ஒத்துறவு கூட்டுச் செயற்பாட்டில் இடைவெளியே ஏற்படும். முயற்சி எவர்களாலோ எடுக்கப்பட்டு, விடயம் யாரிடமோ கைமாறி, இப்பொழுது புலம்பெயர் தேசத்தில் உள்ள சிலர் வழிநடத்துகின்ற நிலைதான் காணப்படுகிறது. தற்போது அரிய நேத்திரனை வழிப்படுத்துவது யார் எனும் கேள்வியும் உண்டு.

தமிழரசுக் கட்சியின் நிலைதான் இவர்களுக்குள்ளும். ஆயுதக் குழுக்கள் ஒருபுறமும், சிவில் பிரமுகர்கள் மற்றொரு புறமும், புலம்பெயர்ந்த தேசத்தில் உள்ளவர்கள் தாங்கள்தான் பணம் வழங்கி, பொது வேட்பாளருக்குரிய செலவுகள் அத்தனையும் வழங்கி, ஏனையவர்களை இணைத்து, எட்டு மாவட்டத்திலும் பரப்புரையில் ஈடுபடுகிறோம் என கூறுகிறார்கள். அப்படியானால் பொதுக் கட்டமைப்பின் பணி என்ன? அதில் உள்ள கட்சிகளின் முடிவு என்ன? வெறுமனே வாக்களிப்பதற்கு நோட்டீஸ் வழங்கி விட்டால் போதுமா? லீசிங் கம்பனி போல் கலர் கலராய் உடை அணிந்து வீதி வீதியாய் விளம்பர துண்டு பிரசுரம் வழங்குவது போல் காணப்படுகிறது. இது வாக்காக மாறுமா?

இரண்டு வாரங்கள் பொறுத்திருந்து பார்ப்போம். ஒரு இலட்சம் வாக்கை தாண்டி விட்டால் வெற்றிகரமான தோல்வி அல்லது அதற்கு கீழே போனால் தோல்விகரமான வெற்றியென புது வியாக்கியானத்தை பத்தி எழுத்தாளர்கள் புகட்ட முற்படுவார்கள்.

மும்முனை போட்டியிலே யார் வெல்வார் என இதுவரையில் தெளிவான கோடிகாட்டல்கள் ஒன்றும் வெளிப்படவில்லை. அவரவர் விருப்புக்கு ஏற்றபோல் பேசிக் கொள்கிறார்கள். யார் வரவேண்டும் என்பதை விட, யார் வரக்கூடாது என்பதே அரசியலில் முக்கியம். அதனை எதிர்க்கின்ற - விரும்புகின்ற - தரப்புக்கள் எவ்வாறு தந்திரோபாய காய் நகர்த்தலை மேற்கொள்ளப் போகின்றன என்பதற்கு காலம்தான் கட்டியம் கூற வேண்டும். யார் வந்தாலும் தமிழ் மக்களின் நிலை பரிதாபகரமானதே!

# வவுனியாவில் 14 வயது சிறுமி 6 மாத கர்ப்பம்: முன்னாள் போராளிக்கு எதிராக முறைப்பாடு!


(வவுனியா நிருபர்)

வவுனியாவில் 14 வயது சிறுமி ஒருவர் கர்ப்பம் தரித்து 6 மாதம் ஆன நிலையில், முன்னாள் போராளி ஒருவருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் நேற்றுத் தெரிவித்துள்ளனர்.

வவுனியா, ஈச்சங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வசித்து வந்த குறித்த சிறுமியை கடந்த பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதி முன்னாள் போராளியும், போராளிகள் நலன்சார்ந்த அமைப்பு ஒன்றின் தலைவருமான இளைஞர் துஷ்பிரயோகம் செய்தார் என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்தச் சம்பவம் தொடர்பில் சிறுமியின் தாய்க்கு தெரிய வந்த நிலையில் இது குறித்து வெளியில் தெரியப்படுத்தக் கூடாது என குறித்த முன்னாள் போராளி மிரட்டினார் எனவும், தற்போது சிறுமி 6 மாத கர்ப்பிணியாக உள்ள நிலையில் பாதிக்கப்பட்ட சிறுமியின் தாயார் மாவட்ட செயலக சிறுவர் பிரிவு மற்றும் வவுனியா பொலிஸ் நிலையம் என்பவற்றில் முறைப்பாடு செய்துள்ளார் எனவும் கூறப்படுகின்றது. இது தொடர்பாக வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய வவுனியா தோணிக்கல் பகுதியில் வசித்து வந்த முன்னாள் போராளியும், போராளிகள் நலன் சார்ந்த அமைப்பு ஒன்றின் தலைவருமான சந்தேகநபர் கடந்த சில மாதங்களாக முகப்புத்தகத்தில் விடுதலைப் புலிகள் தொடர்பில் பதிவேற்றியமைக்காக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்பில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.




# கீரிமலை ஜனாதிபதி மாளிகையின் பிரதேசத்தையும் சடையம்மா சமாதியுடன் சுவீகரிக்க இரகசிய நகர்வு!

## காதும் காதும் வைத்தால் போல நில அளவீடு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் கீரிமலை ஜனாதிபதி மாளிகைப் பிரதேசத்தை சடையம்மா சமாதியுடன் சுவீகரிக்கும் நோக்கில் இரகசியமான முறையில் நில அளவீடு மேற்கொண்டு வரைபடம் பிரதேச செயலகத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் தெல்லிப்பளை பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கீரிமலையில் பொது மக்களிற்குச் சொந்தமான நிலத்தில் அமைக்கப்பட்டுள்ள ஜனாதிபதி மாளிகையும் அதனை அண்டிய நிலம் முழுவதனையும் நில சுவீகரிப்பிற்கு உட்படுத்தும் முதல் அங்கமாக அப்பகுதியை நில அளவைத் திணைக்களத்தின் தலைமைப் பணிமனை அதிகாரிகள் கொழும்பில் இருந்து வருகை தந்து அளவீட்டினை மேற்கொண்டு அதன் வரைபடத்தினை தெல்லிப்பளை பிரதேச செயலாளரிடம் தற்போது கையளித்துள்ளனர்.

ஜனாதிபதி மாளிகை உள்ளடங்கலாக 6 ஏக்கர் நிலம் அளவீடு செய்யப்பட்டு வரைபடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதோடு அப்பகுதி காணிகளின் பெயர் பொன்னுப்புதுக்காடு எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிலத்தின் உரிமையாளர்களைத் தெரியாது என வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அரச காணிகளும் உள்ளடங்குவதாகவும் காணிகளின் எல்லைகள் படை முகாம் எனவும் குறிப்பிடப்பட்டு 2024-08-29 அன்று நில அளவைத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் ஒப்பமிட்டுள்ளார்.

கீரிமலை ஜனாதிபத மாளிகை தனியார் பல்கலைக் கழகத்திற்கு வழங்க ஏற்கனவே இரகசியமான முறையில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்ட பின்பு சுவீகரிப்பு பணி துரிதப்படுத்தப்பட் டுள்ளது. இதேநேரம் தையிட்டி விகாரைப் பகுதி இரகசியமாக அளவீடு செய்து வரைபடம் வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# மணிப்பூரில் மீண்டும் வன்முறை: துப்பாக்கிச் சூட்டில் 5 பேர் பலி!

## ட்ரோன் தாக்குதலால் மக்கள் அச்சம்

மணிப்பூரின் ஜிரிபாம் மாவட்டத்தில் நேற்று நடந்த புதிய வன்முறையில் பொதுமக்களில் ஒருவர் உட்பட 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த ஆண்டு மே 3 ஆம் திகதி குகி ஸோ பழங்குடியினர் மற்றும் மைத்தேயி சமூகங்களுக்கு இடையில் ஏற்பட்ட இனக்கலவரம் ஓராண்டுக்கு மேலாக நீடித்து வருகிறது.

இந்த மோதல் கடந்த ஞாயிற்றுக் கிழமை முதல் மீண்டும் தீவிரமடைந்துள்ளது. போராட்டாக்காரர்கள் இந்த முறைட்ரோன்கள்,ரொக்கெட்கள்போன்ற நவீனத் தொழில்நுட்பங்களை பயன்படுத்த தொடங்கியுள்ளனர்.

இதனால், மணிப்பூர் மாநிலத்தில் மீண்டும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. பிஷ்ணுபூர், கிழக்கு இம்பால் மாவட்ட மக்கள் விடிய விடிய சிறிய விளக்குகளைகூட அணைத்துவிட்டு அச்சத்தில் உறைந்தனர்.

இந்த நிலையில், மணிப்பூரின் ஜிரிபாம் மாவட்டத்தில் நேற்று இடம்பெற்ற புதிய வன்முறையில் பொதுமக்களில் ஒருவர் உட்பட 5 பேர் உயிரிழந்தனர்.

இதுகுறித்து பொலிஸார் தெரிவிக்கையில், "மாவட்டத் தலைநகரில் இருந்து 5 கி.மீ தூரத்தில் இருக்கும் தனிமைப்படுத்தப்பட்ட இடத்தில் இருக்கும் வீட்டுக்குள் நுழைந்த ஆயுதம் தாங்கிய குழுவினர் அங்கு தூங்கிக் கொண்டிருந்தவரை சுட்டுக்கொன்றனர்.

இந்தக் கொலைக்கு பின்னர், மாவட்டத் தலைநகரில் இருந்து 7 கி.மீ., தொலைவில் உள்ள இடத்தில் இரண்டு சமூகங்களைச் சேர்ந்த ஆயுதம் தாங்கிய குழுக்களுக்கு இடையில் பயங்கர துப்பாக்கிச் சூடு நடந்தது. இதில் மூன்று பழங்குடியின போராட்டக்காரர்கள் உட்பட நான்கு போராட்டக்காரர்கள் உயிரிழந்தனர்." என்று தெரிவித்தனர்.

மணிப்பூர் பாதுகாப்பு படை அதிகாரி ஒருவர் கூறுகையில்,

"போராட்டக்காரர்கள் குழு ஒன்று கிராமத்துக்குள் புகுந்து அங்கு ஒருவரைக் கொன்ற பின்பு துப்பாக்கிச் சூடு சம்பவம் நடந்தது. இனக்கலவரத்தின் ஒரு பகுதியாக இந்த கொலைகள் நடந்துள்ளன. கொல்லப்பட்டவர்கள் குகி பழங்குடியினர் மற்றும் மைத்தேயி ஆகிய இரண்டு தரப்பினைச் சேர்ந்தவர்கள் என்ற தகவல்கள் கிடைத்துள்ளன." – என்றார்.

மாநிலத்தில் 17 மாதங்களுக்கு முன்பு வன்முறை உருவாகித் தொடர்ந்து வரும் சூழ்நிலையில், கடந்த வெள்ளிக் கிழமை தாக்குதலில் முதல் முறையாக ரொக்கெட்கள் பயன்படுத்தப்பட்டன என அதிகாரிகள் தெரிவித்தனர். முதல்முறையாக ட்ரோன்கள் பயன்படுத்தப்பட்ட ஆறு நாள்களுக்கு பின்னர் இந்த ரொக்கெட் தாக்குதல் நடந்துள்ளது.

இதுகுறித்து, கடந்த வெள்ளிக்கிழமை பின்னிரவில் பொலிஸார் வெளியிட்ட அறிக்கையில்,



"குகி போராட்டக்காரர்கள் நீண்ட தூரம் தாக்கும் வகையிலான ரொக்கெட்டை பயன்படுத்தியுள்ளனர். கடந்த வெள்ளிக்கிழமை ஏவப்பட்ட ரொக்கெட் குறைந்தது நான்கு அடிகள் உள்ளது. துரு பிடிக்காத வகையில் துத்தநாகம் பூசப்பட்ட இரும்புக்குழாயில் வெடிமருந்துகளை நிரப்பி, அதனை உள்ளூரில் தயாரிக்கப்பட்டரொக்கெட்லோஞ்சரில்வைத்து சுடப்பட்டுள்ளது. ரொக்கெட் அதிக தூரம் செல்வதற்கு போராட்டக்காரர்கள் அதில் வெடிமருந்துகளின் அளவினை மாற்ற வேண்டும். அமைதியாக இருந்த மாதங்களில் அவர்கள் அதற்கு பயிற்சி பெற்றுள்ளனர்." என்று தெரிவித்திருந்தனர்.

### விநாயகர் சதுர்த்தி:

# உச்சிப்பிள்ளையாருக்கு பிரம்மாண்ட கொழுக்கட்டை



விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு திருச்சி மலைக்கோட்டை தாயுமான சுவாமி கோயிலில் உள்ள உச்சி பிள்ளையாருக்கு 75 கிலோ கொழுக்கட்டை, மலைக்கோட்டை அடிவாரத்தில் உள்ள மாணிக்க விநாயகருக்கு 75 கிலோ கொழுக்கட்டை என மொத்தம் 150 கிலோ கொழுக்கட்டை படையலிடப்பட்டது.

இந்த சிறப்பு பூஜையில் தமிழகம் மட்டுமின்றி வெளிநாட்டு பக்தர்களும் கலந்து கொண்டனர்.

திருச்சி மலைக்கோட்டையின் நடுவே தென் கயிலாயம் என்று போற்றப்படும் தாயுமான சுவாமி கோயிலும், மலையின் உச்சியில் உச்சிப்பிள்ளையார் சன்னதியும், மலையின் அடிவாரத்தில் மாணிக்க விநாயகர் சன்னதியும் உள்ளன.

இந்தக் கோயில்களில் விநாயகர் சதுர்த்தி விழா நேற்று தொடங்கி எதிர்வரும் 20 ஆம் திகதி வரை நடைபெற உள்ளது. அதன்படி நேற்று விநாயகர் சதுர்த்தி விழாவையொட்டி காலை 7 மணியளவில் மலைக்கோட்டை கோயில் யானை லட்சுமிக்கு கஜபூஜை நடைபெற்றது.

பின்னர் பிரம்மாண்ட கொழுக் கட்டையும் நைவேத்தியம் செய்யப் பட்டது. இந்த விழாவிற்காக கோயில் மடப்பள்ளியில் 6 கிலோ வரையிலான தேங்காய்ப்பூ, 60 கிலோ பச்சரிசி மாவு, 60 கிலோ அளவிலான உருண்டை வெல்லம், 4 கிலோ ஏலக்காய், ஜாதிக் காய், எள் மற்றும் 30 கிலோ நெய் உள்ளிட்ட பொருட்களை பயன்படுத்தி 24 மணி நேரத்திற்கு முன்பு சுடுநீர் ஆவியில் வேகவைத்து 150 கிலோவில் பிரம்மாண்ட கொழுக்கட்டை தயார் செய்யப்பட்டது.

பின்னர் அந்தகி கொழுக்கட்டையை நேற்றுக் காலை கோயில் பணியாளர்கள் ஒரு துணியில் தொட்டில் போல கட்டி மடப்பள்ளியில் இருந்து தூக்கிக்கொண்டு சென்றனர். இதில் உச்சிப்பிள்ளையாருக்கும், பின்னர் மாணிக்க விநாயகருக்கும் தலா 75 கிலோ அளவிலான கொழுக்கட்டையை படையலிட்டனர்.

# காசா மீது இஸ்ரேல் தாக்குதல்

# இரு நாள்களில் 61 பேர் பலி!







காசா மீது இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் கடந்த 2 நாள்களில் மாத்திரம் 61 பேர் உயிரிழந்தனர்.

ஹமாஸ் நடத்தும் சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இத் தாக்குதலில் 162 பேர் வரை காயமடைந்துள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

காசா மீதான இஸ்ரேலின் தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இதுவரை 40,939 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.





# சுவிட்சர்லாந்தில் 10 வீதத்தினால்

# குறைவடையும் மின்சாரக் கட்டணம்

சுவிட்சர்லாந்தில் மின்சாரக் கட்டணங்கள் குறைக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், எதிர்வரும் 2025 ஆம் ஆண்டில் மின்சாரக் கட்டணங்கள் சராசரியாக 10 வீதத்தினால் குறைக்கப்படவுள்ளதாக மத்திய மின்சார ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மேலும், சாதாரண குடும்பம் ஒன்று சராசரியாக 4500 KWH மின்சாரத்தை பயன்படுத்தினால் அந்தக் குடும்பத்தின் கட்டணம் 141 சுவிஸ் பிராங்குகளாக குறையும் எனவும், தற்பொழுது இந்த தொகை 166 சுவிஸ் பிராங்குகளாக காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளது.

அந்தவகையில் மின்சார விநியோகம் உள்ளிட்ட பல்வேறு காரணிகளின் அடிப்படையில் மின் கட்டணம் குறைக்கப்படுவதாகவும் அந்நாட்டு அரசாங்கம் அறிவித்துள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 08.09.2024




இன்று உங்கள் பொறுமை சோதனைக்குள்ளாகும் நாள். முறையான தகவல் பரிமாற்றம் இல்லாத காரணத்தால் உங்கள் பிரியமான ஒருவருடன் மோதல் ஏற்படலாம். இன்று சிறந்த பலன்களைக் காண நீங்கள் உங்கள் புத்திசாலித்தனத்தை பயன்படுத்த வேண்டும்.

கடின உழைப்பின் மூலம் தான் வெற்றி காண முடியும். பணியிடத்தில் சமயோசித புத்தியை பயன்படுத்த வேண்டியது அவசியம்.

உங்கள் மனக்குழப்பத்தை உங்கள் துணையிடம் காண்பிக்காதீர்கள். அமைதியான மனநிலையில் இருப்பது சிறந்தது.

இன்று நிதிநிலை சராசரியாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள இயலாது. அதற்கு நீங்கள் சிறு கடன்கள் வாங்குவீர்கள்.




இன்று நீங்கள் வருத்ததுடனும் மன உளைச்சலுடனும் காணப்படுவீர்கள். உங்கள் திறமைகளை சிறந்த முறையில் பயன்படுத்தினால் முன்னேற்றம் கிட்டும்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும். திறமையாக பணியாற்ற நீங்கள் சிறப்பாக திட்டமிட வேண்டும்.

இன்றைய நாள் உங்கள் துணையிடம் கருத்துக்களை பரிமாறுவதற்கு உகந்த நாள் அல்ல. எனவே உங்கள் தொடர்புகளில் கவனம் செலுத்துவது சிறந்தது.

பங்கு வர்த்தகம் மூலம் நீங்கள் பணம் சம்பாதிக்கலாம். என்றாலும் உங்களால் அதிகமாக சேமிக்க இயலாது.

இன்று செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் காணப்படும். அதிக நீரைப் பருகவும்.




இன்று இழப்புகள் ஏற்படாத வகையில் கவனமாக நடந்து கொள்ள வேண்டும். பொறுமையாக இருக்க வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

உங்களின் சில பணிகள் முடிக்கப்படாமல் இருக் கும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் திறமை யோடு முடிப்பதற்கு திட்டமிடல் அவசியம்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்பட்டு சிறிது வன்மையாக நடந்து கொள்வீர்கள்.மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய நடத்தையை தவிர்க்க வேண்டும்.

அதிக பொறுப்புகள் காரணமாக அதிக செலவுகள் காணப்படும். தேவையற்ற செலவுகளை கண்காணிக்க வேண்டும்.

வயிறு உப்பசம் காரணமாக அவதிப்பட நேரலாம்.




இன்று உங்கள் செயல்களில் மும்மரமாக இருப்பீர்கள். உங்கள் முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். இன்றைய நாளை முக்கிய முடிவுகள் எடுக்க பயன்படுத்திக் கொள்வீர்கள்.

உங்கள் பணி நிமித்தமான பயணம் காணப்படும். அதன் மூலம் புதிய வாய்ப்புகள் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்குச் சென்று வருவதன் மூலம் ஒன்றாக செயல்படுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று பண வரவு காணப்படும். இன்று எதிர் காலத்திற்காக பணத்தை சேமிப்பீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக காணப்படும்.




உங்கள் வளர்ச்சியில் சில தடைகள் காணப்படும். இன்று வெற்றி காண்பதற்கு முறையாக திட்டமிட வேண்டியது அவசியம்.

உங்கள் பணியில் தவறுகள் நேரலாம். பணிகளை முடித்து ஒப்படைப்பதற்கு முன் கவனமாக சரி பார்க்க வேண்டும்.

உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொள்வதன் மூலம் உறவில் மகிழ்ச்சியை தக்க வைத்துக் கொள்ள முடியும்.

இன்று நிதி வளர்ச்சி குறைந்து காணப்படும். ஆனால் பூர்வீக சொத்து அல்லது எதிர்பாராத வகையில் பணவரவு காணப்படும். இன்று ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்காது. அதிகப் பணிகள் காரணமாக தலைவலி ஏற்படலாம்.




இன்று சில ஏமாற்றங்கள் காணப்படும். அது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். மற்றவர்கள் தரும் வாக்குறுதிகளை சார்ந்து இருக்க வேண்டாம். உங்கள் விருப்பங்கள் நிறைவேற நீங்கள் கடுமையாக உழைக்க வேண்டும்.

பணியிடச் சூழல் மகிழ்ச்சிகரமாக இருக்காது. சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்காது.

உங்கள் துணையிடம் நீங்கள் உணர்சிவசப்படுவீகள். இதனால் உங்கள் உறவில் அமைதியின்மை காணப்படும்.

பண வரவு காணப்பட்டலும் அதிகரிக்கும் செலவுகளை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உடல் உழைப்பின் காரணமாக கால் வலி ஏற்படலாம். உடற் பயிற்சி மற்றும் தியானம் மேற்கொள்வது நல்லது.




ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் நற்பலன்களை அடையலாம். பிரார்த்தனை மற்றும் இறை வழிபாடு இன்று சிறந்தது.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. எனவே உங்கள் பணிகளை கவனமாக ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் மோதல்கள் காணப்படும். இருவரும் கவனமாக உரையாட வேண்டும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமாக இருக்காது. இன்று கூடுதல் செலவினங்களை சமாளிக்க வேண்டியிருக்கும்.

பரபரப்பான பணிகள் காரணமாக தலைவலி அல்லது கால் வலி ஏற்படலாம். தியானம் மேற் கொள்வதன் மூலம் ஆறுதல் பெறலாம்.




இன்று நீங்கள் உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்தினால் உங்கள் லட்சியங்களை அடையலாம். சிறந்த பலனைக் காண இன்று கிடைக்கும் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

உங்கள் பணிக்கு அங்கீகாரம் பெறுவீர்கள். உங்கள் செயல்திறன் சிறப்பாக இருந்தாலும் நீங்கள் முழு திருப்தியடைய மாட்டீர்கள்.

உங்கள் துணையுடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும். நட்பான அணுகுமுறை மேற்கொள்வது சிறந்தது.

காப்பீடு போன்ற வகையில் எதிர்பாராத பண வரவு காணப்படும். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். பணத்தை கவனமாகக் கையாளவும்.

# இன்றைய ராசி பலன்கள் - 08.09.2024




இன்று தடைகளையும் கஷ்டங்களையும் சமாளிக்க வேண்டியிருக்கும். நீங்கள் முயற்சி எடுத்தால் இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக வெற்றியை அளிக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பீர்கள்.

உங்களின் அகந்தைப் போக்கு காரணம்மாக உறவில் நல்லிணக்கம் குறைந்து காணப்படும். உங்கள் துணையின் உணர்வுகளை கருத்தில் கொண்டு மதிப்பது நல்லது.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. கவனம் தேவை.

தேவையற்ற எண்ணங்கள் காரணமாக குழப்பம் மட்டுமன்றி தலைவலியும் ஏற்படும்.




உங்கள் செயல்களை மேற்கொள்வதில் தடைகள் காணப்படும் ஒரு முடிவை செயலாக்குவதற்கு முன் ஒன்றிற்கு இரண்டு முறை யோசிக்க வேண்டும். தகவல் பரிமாற்றத்தில் குறைபாடு காணப்படும்.

சக பணியாளர்களுடன் சூடான விவாதங்கள் அல்லது அகந்தை உணர்வுகள் தலை தூக்கும். அத்தகைய சூழ்நிலையை நீங்கள் உருவாக்காமல் இருப்பது சிறந்தது.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.

நிதிநிலைமை சாதகமாக இருக்காது. தேவையற்ற செலவுகளால் கவலை ஏற்படும்.

கண்களில் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது.




உங்கள் மனதில் காணப்படும் குழப்பம் காரணமாக பாதுகாப்பற்ற உணர்வு ஏற்படும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதங்கள் காணப்படும். இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும். உங்கள் பணிகளை திறமையாக ஆற்ற நீங்கள் திட்டமிட வேண்டும்.

குறைவான புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும்.இருவரும் மனம் திறந்து பேசிக்கொள்வது சிறந்தது.

நிதிநிலைமை அவ்வளவு சிறப்பாக இருக்காது. இன்று கூடுதல் செலவுகள் காணப்படும்.குழந்தைகளின் ஆரோக்கியம் பற்றிய கவலை காணப்படும். அவர்களின் ஆரோக்கியத்துக்காகப் பணம் செலவு செய்ய நேரும்.




இன்று அனுகூலமான நாளாக இருக்கும். உங்கள் மனதில் நேர்மை எண்ணங்கள் காணப்படும். இதன் மூலம் நன்மைகள் நடக்கும்.

இன்று பணிகள் மும்மரமாக காணப்படும். என்றாலும் நீங்கள் உங்களுக்கு கொடுத்த பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்கும்.

உங்கள் உறவில் அமைதியும் மகிழ்ச்சியும் காணப்படுகின்றது. உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு செல்வீர்கள்.

நிதிநிலைமை முன்னேற்றகரமாக இருக்கும். பூர்வீகச் சொத்து வகையில் எதிர்பாராத பணவரவு காணப்படுகிறது.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்றைய நாளை சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.












# யூனியன் அஷ்யூரன்ஸ் உறுதியான நிதிப் பெறுபேறுகளைப் பதிவு செய்தது

இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகள் வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், 2024 முதல் அரையாண்டு காலப்பகுதியில் உறுதியான நிதிப் பெறுபேறுகளை பதிவு செய்துள்ளதாக அறிவித்துள்ளது. பிரதான அளவுகோல்களில் உறுதியான வளர்ச்சி மற்றும் வினைத்திறனை பதிவு செய்துள்ளது.

2024 ஆம் ஆண்டில் யூனியன் அஷ்யூரன்ஸ் தேறிய கட்டுப்பண வழங்கல் ரூ. 9.8 பில்லியனாக உயர்ந்திருந்தது. 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 16வீத வளர்ச்சி என்பது குறிப்பிடத்தக்கது.

அனைத்து இலங்கையர்களின் ஆயுளை பாதுகாப்பது மற்றும் நலனுக்கு வளமூட்டுவது எனும் தனது நோக்கத்தின் பிரகாரம், ரூ. 3.3 பில்லியனை உரிமைகோரல்களாக பதிவு செய்து காப்புறுதிதாரர்களுக்கான தமது அர்ப்பணிப்பை நிறுவனம் மீளுறுதி செய்திருந்தது.

ஆண்டில் ரூ. 5.7 பில்லியனை தேறிய முதலீட்டு வருமானமாக நிறுவனம் பதிவு செய்திருந்தது. 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 11 வீத வளர்ச்சியை பதிவு செய்திருந்தது. யூனியன் அஷ்யூரன்ஸின் வினைத்திறனான சொத்துகள் ஒதுக்கீடு மூலோபாயம், குறைந்த வட்டி வீதத்துடனான சூழல் ஆகியவற்றில் இதனை பிரதிபலித்திருந்தது.

2024ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் நிறுவனத்தின் நிர்வாகத்தின் கீழான சொத்துகள் ரூ. 86.6 பில்லியனாக பதிவாகியிருந்தது. மேலும், மூலதன போதுமை விகிதம் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாட்டை விட உயர்ந்த மட்டத்தில் பேணப்பட்டிருந்தது. சந்தை மூலதனவாக்கமும் உறுதியான வளர்ச்சியை பதிவு செய்து, 22 வீதத்தால் உயர்ந்து ரூ. 28.6 பில்லியனாக பதிவாகியிருந்தது. உயர்ந்த முதலீட்டாளர் நம்பிக்கை மற்றும் நேர்த்தியான சந்தை நோக்கு ஆகியவற்றை பிரதிபலித்திருந்தது.

சிறந்த நிதிப் பெறுபேறுகள் தொடர்பில் யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரி செனத் ஜயதிலக கருத்துத் தெரிவிக்கையில்,

“2024 ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதிக்கான நிதிப் பெறுபேறுகளை பகிர்ந்து கொள்வதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். தொழிற்படு சூழலில் தளம்பல்கள் காணப்பட்ட போதிலும், யூனியன் அஷ்யூரன்ஸின் உறுதியான பெறுபேறுகளினூடாக, மீட்சி, உறுதித்தன்மை மற்றும் நிலைபேறான வளர்ச்சியை பதிவு செய்வதற்கான ஒப்பற்ற அர்ப்பணிப்பு, பங்காளர்கள், வாடிக்கையாளர்கள், பங்குதாரர்கள் மற்றும் பரந்த சமூகத்துக்கு சிறந்த பெறுமதியை ஏற்படுத்திக் கொடுப்பதில் தனது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளது.

இவ்வாண்டில் எமது பயணத்தை தொடரும் நிலையில், எமது அர்ப்பணிப்பான அணியினர், பெறுமதிகளை செம்மையாக்குதல் மற்றும் ஆண்டை உறுதியான நிறைவுக்கு கொண்டு வருதல், தேசத்தின் முன்னணி ஆயுள் காப்புறுதியாளர் எனும் எமது நிலையை மீள உறுதி செய்வதில் கவனம் செலுத்துகின்றனர்.” - என்றார்.

7 துறைகளில் 70க்கும் அதிகமான நிறுவனங்களைக் கொண்டு, கொழும்புப் பங்குப்பரிவர்த்தனையில் பட்டியலிடப்பட்ட இலங்கையின் மாபெரும் நிறுவனமான ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்சின் அங்கத்துவ நிறுவனமாக யூனியன் அஷ்யூரன்ஸ் திகழ்கின்றது.

துறையில் மூன்று தசாப்த கால வெற்றிகரமான சேவையை யூனியன் அஷ்யூரன்ஸ் பூர்த்தி செய்துள்ளதுடன், 2024 மார்ச் மாத இறுதியில் சந்தை மூலதனவாக்கமாக ரூ. 27.6 பில்லியனையும், ஆயுள் நிதியமாக ரூ. 67.8 பில்லியனையும் கொண்டிருந்தது. இலங்கையர்களின் கனவுக்கு வலுச்சேர்க்கும் வகையில் இயங்கும் யூனியன் அஷ்யூரன்ஸ், கல்வி, ஆரோக்கியம், பாதுகாப்பு, ஓய்வூதியம் மற்றும் முதலீடு போன்ற ஆயுள் காப்புறுதியுடன் தொடர்புடைய தீர்வுகளை இலங்கையர்ளுக்கு வழங்குகின்றது.

நாடளாவிய ரீதியில் பரந்த கிளை வலையமைப்பினூடாக 3,800 இற்கும் அதிகமான ஊழியர்களைக் கொண்டு இயங்கும் யூனியன் அஷ்யூரன்ஸ், தொடர்ச்சியான தனது ஊழியர்கள், தீர்வுகள் மற்றும் செயன்முறைகள் போன்றவற்றில் வாடிக்கையாளர்களை மையப்படுத்திய முன்னேற்றங்களை மேற்கொள்ளும் வகையில் முதலீடுகளை மேற்கொண்ட வண்ணமுள்ளது.







# Dialog Innovation Challenge இன் அடுத்தகட்ட இறுதிப்போட்டியாளர்களை டயலொக் அறிவிக்கிறது

இலங்கையின் #1 இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி, Dialog Innovation Challenge மாபெரும் இறுதிப்போட்டிக்கான அடுத்த நான்கு இறுதிப்போட்டியாளர்களையும் அறிவித்தது.

இலங்கை மக்கள், வணிகம் மற்றும் சமூகங்களின் வாழ்வை நேர்மறையான விதத்தில் மாற்றியமைக்கும் பொருட்டு புத்தாக்கமிக்க டிஜிட்டல் தீர்வுகளை நாடளாவிய ரீதியில் கண்டறிவதே இந்த செயற்றிட்டத்தின் நோக்கமாகும். இந்த செய்தி உள்நாட்டு மக்களின் முக்கிய தேவைகளை தீர்த்து அர்த்தமுள்ள டிஜிட்டல் முன்னேற்றத்தை அளிப்பதற்காக டயலொக் காட்டும் தொடர்ச்சியான அர்ப்பணிப்பை இது எடுத்துக்காட்டுகிறது.

புதிதாக தெரிவான இறுதிப்போட்டியாளர்களில் Cubic எனும் IoT அடிப்படையிலான மொபைல் செயலி (App), BabyChart எனும் சிசு வளர்ச்சியை கண்காணிக்கும் நூலிற்கான ஒரு மாற்று டிஜிட்டல் தீர்வு, Shop2Message எனும் சிறு அளவிலான கடைகளுக்கு பண்டங்களை கடனுக்கு பெறுதல் மற்றும் தவணை முறை கட்டணங்களை சீரிய முறையில் பேணும் ஒரு செயலி, WattWise எனும் பயனர்களின் மின்சக்தி பாவனை குறித்து துல்லியமான தகவல்களை அளித்து அவர்களது மின்கட்டணங்களை வினைத்திறன்மிக்க முறையில் மேலாண்மை செய்ய செயற்கை நுண்ணறிவின் துணை கொண்டு இயங்கும் ஒரு செயலி ஆகியன அடங்கும்.

இவர்கள் இதற்கு முன் தெரிவான இறுதிப்போட்டியாளர்களான, SeaLanka-இன் செயற்கை நுண்ணறிவினால் இயங்கும் ஒரு மீன்பிடி வலயத்தை கணிக்கும் செயலி, BODO-வின் விடுதி (Hotel) முன்பதிவு மற்றும் முகாமைத்துவ மென்பொருள் அமைப்பு, AudiPhix-இன் ஒலித்திறன் செயலாக்கக் குறைப்பாட்டுக்கான செயலி, FlashGuard-இன் ஒளியுணர் வலிப்பு தடுப்புக்காக வடிவமைக்கப்பட்ட Smart கண்ணாடிகள், Smart Aqua-இன் இறால் வளர்ப்போருக்கான IoT தீர்வு ஆகிய அணிகளுடன் இணைந்துகொள்வர்.

ஒவ்வொரு இறுதிப்போட்டியாளரும் அவர்களது புத்தாக்கமான அணுகல், நிலைத்து வளரும் தன்மை (scalability), இலங்கையர்களின் வாழ்வில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும் ஆற்றல் ஆகியவற்றை அடிப்படையாக கொண்டே தெரிவு செய்யப்படுகின்றனர்.

இவர்களை தெரிவு செய்யும் நடுவர் குழாத்தில் துறையில் கைதேர்ந்த வல்லுனர்களான கலாநிதி. ரமேஷ் சண்முகநாதன், நிறைவேற்று துணைத்தலைவர் மற்றும் குழும பிரதம தகவல் அதிகாரி, John Keels குழுமம்; ஷஷி கண்டம்பி, தேசிய சேமிப்பு வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி; ஷெரின் காதர், Nations Trust Bank PLC இன் தலைவர்; ரேணுகா பெர்னாண்டோ, டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சி. குழுமத்தின் பிரதம டிஜிட்டல் சேவைகள் அதிகாரி மற்றும் Dialog Finance பிஎல்சியின் தலைவர்; அசேல பெரேரா, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழுமத்தின் பிரதம தகவல் அதிகாரி; ரங்கா காரியவசம், டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழுமத்தின் பிரதம தொழில்நுட்ப அதிகாரி, விரங்க செனவிரத்ன, டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சியின் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் தளங்களில் வணிக தலைவர் ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

போட்டி அடுத்தடுத்த கட்டங்களுக்கு நகர்கையில் பங்கேற்பாளர்களுக்கு டயலொக் அதன் பங்காளர்களுடன் இணைந்து ஒழுங்குபடுத்தும் இலக்குடன் கூடிய செயலமர்வுகளின் வழியாக அனுகூலங்களை பெற்றிட முடியும். இந்த செயலமர்வுகள், அவர்களின் தீர்வுகளை மேலும் மேம்படுத்தவும், தொலைக்காட்சி ஒளிபரப்புகளின் போது நிபுணர்களிடமிருந்து முக்கியமான பின்னூட்டங்களை பெறுதலையும் நோக்கமாகக் கொண்டே அளிக்கப்படுகின்றன.

இறுதி சுற்றில் உள்ளவர்கள், ரூபா ஐந்து மில்லியன் பரிசுக்குவியல் மற்றும் மேம்பட்ட தொழில்நுட்ப வசதிகளுக்கான அணுகல், முன்னணி தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க அமைப்புகளின் தொடர்ச்சியான வழிகாட்டுதல், மேலும் ரூ. 500 மில்லியன் DIF (Digital Innovation Fund) முதலீட்டு நிதியின் ஒரு பாகத்தை வெல்லும் வாய்ப்பு ஆகியவற்றிற்காகப் போட்டியிடுகின்றனர்.







# கொழும்பு பங்குப்பரிவர்த்தனையில் அறிமுகமாகவுள்ள LTL Holdings

40 வருட கால அனுபவத்தைக் கொண்ட, இலங்கையின் பன்முகப் படுத்தப்பட்ட, ஒன்றிணைக்கப்பட்ட வலுத்துறையில் முன்னணி நிறுவனமாகிய LTL Holdings Limited, ஆரம்ப பொது பங்கு வழங்கல் குறித்து அறிவித்துள்ளதுடன், கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடதுள்ளது.

மேலும், இப்பட்டியலிடலானது, கொழும்பு பங்குப்பரிவர்த்தனையில் முன்னெடுக்கப்படவுள்ள மாபெரும் ஆரம்ப பொது பங்கு வழங்கலாக அமைந்திருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆரம்ப பொது பங்கு வழங்கலினூடாக, பங்கொன்றுக்கு ரூ. 14.50 வீதம் 1,379,310,400 புதிய சாதாரண வாக்குரிமை பங்குகள் வெளியிடப்படவுள்ளதுடன், அதன் ஆரம்ப மொத்த மதிப்பு ரூ. 16 பில்லியனாக அமைந்திருக்கும். ஆரம்ப பொது பங்கு வழங்கலினூடாக இந்தப் பெறுமதியை ரூ. 20 பில்லியனாக உயர்த்துவதற்கும், பொது மக்களுக்கு LTL நிறுவனத்தின் 22.3% உரிமையாண்மையை பெற்றுக் கொடுப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த ஆரம்ப பொது பங்கு வழங்கல் 2024 செப்டெம்பர் 10 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதுடன், பங்கு கொள்முதலுக்கான விண்ணப்பங்கள் தற்போது ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

ஆரம்ப பொது பங்கு வழங்கலிலிருந்து பெறப்பட்ட தொகையில், ரூ. 13.5 பில்லியன், கெரவலபிட்டிய பகுதியில் (சஹாஸ்தனாவி லிமிடெட்) 350 MW இணைந்த சுழற்சி வலுப் பிறப்பாக்கல் ஆலையை நிர்மாணிப்பதற்கான முதலீடாக பயன்படுத்தப்படும். இது, இலங்கையில் திரவ இயற்கை எரிவாயுவில் (LNG) இயங்கும் இரண்டாவது வலுப்பிறப்பாக்கல் நிலையமாக இது அமைந்திருக்கும்.

மேலும் மிகுதி தொகை ரூ. 6.0 பில்லியன், சியம்பலாண்டுவ சூரிய மின் வலுப் பிறப்பாக்கல் (ரிவிதனாவி பிரைவட் லிமிடெட்) திட்டத்தின் 50 வீத பங்குகளில் முதலீடு செய்வதற்கு ஒதுக்கப்படும்.

LTL நிறுவனம் பல்வேறு துறைகளில் இயங்குகின்றது, இதில் மின் உற்பத்தி, மின் உற்பத்தி ஆலை கட்டுமான பொறியியல் சேவைகள் (பொறியியல், கொள்முதல் மற்றும் நிர்மாணம்) மற்றும் O&M (செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு) சேவைகள், வலு விநியோக சாதனங்களின் உற்பத்தி மற்றும் பார பொறியியல் சேவைகள் போன்றன அவற்றில் அடங்கும். மேலும், புதுப்பிக்கப்படக் கூடிய எரிசக்தி, மின் உற்பத்தி துறைகளிலான முதலீடுகளில் உறுதியான நோக்கத்தை கொண்டுள்ளதுடன், நிறுவனத்தின் வளர்ச்சி மூலோபாயத்தில், இந்த ஆரம்ப பொது பங்கு வழங்கல், மிக முக்கியமான மைல்கல்லை பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது. இதன் மூலம், LTL நிறுவனம், இலங்கையின் வலுத்துறையில் முன்னணி செயற்பாட்டாளராக தன்னை மீளுறுதி செய்யவும் முன்வந்துள்ளது.

இலங்கை, பங்களாதேஷ் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளில் 894 MW மின் உற்பத்தி ஆற்றலை கொண்டுள்ளதுடன், 450 MW க்கு அதிகமான திறன் கொண்ட மின் உற்பத்தி ஆலைகளை நிறுவத் திட்டமிட்டுள்ள நிலையில், இலங்கையில் 1,000 MW க்கு அதிகமான மின் உற்பத்தி திறனை கொண்ட முதலாவது சுயாதீன வலு உற்பத்தியாளராக LTL நிறுவனம் திகழவுள்ளதுடன், கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிடப்படவுள்ள மாபெரும் சுயாதீன வலு உற்பத்தியாளராகவும் LTL நிறுவனம் அமைந்திருக்கும்.

மேலும், மின்பிறப்பாக்கி (Transormers) உற்பத்தி மற்றும் நாகத்தோய்வு (Galvanizing) செயற்பாடுகளில் குறிப்பிடத்தக்களவு சந்தை நிலையை LTL நிறுவனம் கொண்டுள்ளதுடன், 30 க்கு மேற்பட்ட நாடுகளில் உறுதியான ஏற்றுமதி பிரசன்னத்தை கொண்டுள்ளது.

இதில், தெற்காசியா மற்றும் ஆபிரிக்கா ஆகிய நாடுகளும் அடங்கும். LTL நிறுவனம், தனது இந்திய துணை நிறுவனத்துடன், Switchgear உற்பத்தியிலும் ஈடுபட்டுள்ளது.

இந்திய உள்ளக சந்தை, இதர ஆசிய, மத்திய கிழக்கு மற்றும் ஆபிரிக்க நாடுகளுக்கு அவசியமான மின் வலுப் பிறப்பாக்கலுடன் அவசியமான சானதங்களாக இவை அமைந்துள்ளன.

நிறுவனத்தின் எதிர்கால திட்டங்களில் மின் உற்பத்தி ஆலை நிர்மாணித்திட்டங்கள், உற்பத்தி துறைகளின் சர்வதேச சந்தைகளுக்கான விரிவாக்கம் மற்றும் LNG உட்கட்டமைப்பு வசதிகள் தொடர்பாக காணப்படும் வாய்ப்புகளை இனங்காணல் போன்றன அடங்கியுள்ளன.

நிறுவனத்தின் தற்போதைய பங்குதாரர்களில் இலங்கை மின்சார சபை (CEB), வெஸ்ட் கோஸ்ட் பவர் (பிரைவட்) லிமிடெட், டெக்புரோ இன்வெஸ்ட்மன்ட் லிமிடெட் மற்றும் பெரதெவ் லிமிடெட் போன்றன அடங்கியுள்ளதுடன், LTL நிறுவனத்தின் பணிப்பாளர் சபையில் பல்வேறு துறைகளில் அனுபவம் வாய்ந்த அங்கத்தவர்கள் காணப்படுகின்றனர்.




# செலான் வங்கி 2024 இன் முதல் அரையாண்டில் 4.56 பில்லியன் ரூபா லாபத்தை பதிவு செய்தது





செலான் வங்கி ஜூன் 30, 2024இல் முடிவடைந்த ஆறு மாதங்களுக்கு (H1) ரூ. 4,558 மில்லியன் வரிக்குப் பின்னரான லாபத்துடன் (PAT) வலுவான செயற்திறனைப் பதிவுசெய்தது. இது 2023ஆம் ஆண்டில் இதே கால கட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட ரூ. 2,575 மில்லியனிலிருந்து குறிப்பிடத்தக்க 77வீத வளர்ச்சியை பிரதிபலிக்கிறது. சவாலான சந்தை நிலவரங்கள் இருந்தபோதிலும் வரிக்கு முன்னரான இலாபம் (PBT) முன்னைய ஆண்டை விட 76 வீத அதிகரிப்பைக் காட்டி ரூ. 7,331 மில்லியனை எட்டியது.

வங்கியின் நிகர வட்டி வருமானம் ரூ. 20,468 மில்லியனிலிருந்து ரூ. 18,590 மில்லியனாக 9.18 வீதத்தால் குறைவடைந்ததுடன் நிகர வட்டி மிகை 5.76 வீதத்திலிருந்து 5.17 வீதமாக குறைந்துள்ளது.

நிகர கட்டண அடிப்படையிலான வருமானம் 6.29 வீதத்தால் அதிகரித்தது. இது முதன்மையாக அட்டைகள் தொடர்பான வருமானம், பணம் அனுப்புதல் மற்றும் பிற கடன் சேவைகள் ஆகியவற்றினூடான வருமான அதிகரிப்பின் பிரதிபலிப்பு ஆகும். மொத்த தொழிற்பாட்டு வருமானம் ரூ. 23,279 மில்லியனாக இருந்தது. இது கடந்த ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் 5.41 வீத குறைவை காட்டுவதுடன் பெரும்பாலும் நிகர வட்டி மிகையின் குறைவே காரணம் ஆகும். விற்பனைக்கான தேறிய இலாபம் மற்றும் நிதிச் சொத்துக்களின் அங்கீகார நீக்கத்திலிருந்தான நிகர இலாபம் ஆகியவற்றை உள்ளடக்கிய பிற வருமானம் 52 வீதத்தால் உயர்ந்துள்ளது.

வங்கியின் செயற்பாட்டுச் செலவுகள் ரூ. 9,128 மில்லியனிலிருந்து ரூ. 10,388 மில்லியனாக 13.80 வீதத்தால் அதிகரித்துள்ளது. இது ஊழியர்களின் நன்மைகள் அதிகரித்ததன் விளைவாக ஆளணிச் செலவுகள் 18.69 வீதத்தால் அதிகரித்தன் காரணமாகும். மேலதிகமாக, வங்கியானது ரூ. 2,956 மில்லியன் மதிப்பிறக்கக் கட்டணத்தைப் பதிவு செய்தது. மேம்பட்ட கடன் தரம் மற்றும் திறம்பட்ட மீட்பு முயற்சிகள் காரணமாக 1H 2023இல் தெரிவிக்கப்பட்ட ரூ. 9,559 மில்லியனிலிருந்து இது 69 வீதம் குறைவடைந்துள்ளது.

வருமான வரிச் செலவுகள் 75.31 வீதத்தால் அதிகரித்து ரூ. 2,773 மில்லியனை எட்டிய அதேவேளை நிதிச் சேவைகள் மீதான பெறுமதிசேர் வரி மற்றும் சமூகப் பாதுகாப்பு பங்களிப்பு வரி முன்னைய ஆண்டை விட முறையே 47.43 வீதம் மற்றும் 47.07 வீதத்தால் அதிகரித்துள்ளது.

ஜூன் 30, 2024 நிலவரப்படி, செலான் வங்கியின் மொத்த சொத்துக்கள் ரூ. 725 பில்லியனாகவும், கடன்கள் மற்றும் முற்பணங்கள் நிகர மதிப்பிறக்கம் ரூ.434 பில்லியனாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளன. வைப்புத்தொகை ரூ.603 பில்லியனாக இருந்தது. இதன் போது உள்ளூர் நாணய வைப்புகளில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பும் உள்ளூர் நாணய மதிப்புயர்வு காரணமாக வெளிநாட்டு நாணய வைப்புகள் குறைவடைந்தமையும் குறிப்பிடத்தக்கது.



# ப்ரைம் குழுமத்துடன் யூனியன் வங்கி இணைவு

யூனியன் வங்கி சமீபத்தில் புதிய வீடுதாரர்களுக்கு யூனியன் வங்கி வீட்டுக் கடன்கள் மூலம் நெகிழ்வான நிதி தீர்வுகளை வழங்க ப்ரைம் குழுமத்துடன் கைகோர்த்துள்ளது.

யூனியன் வங்கி சிரேஷ்ட உப தலைவர் நுகர்வோர் வங்கியியல் தலைவர் சாயா ஜயவர்தன மற்றும் ப்ரைம் குழுமத்தின் நிறைவேற்று இயக்குநர்/ இயக்குநர்-கார்ப்பரேட் அலுவல்கள் நலிந்த ஹீனடிகலா முன்னிலையில் மற்றும் யூனியன் வங்கி மற்றும் ப்ரைம் குழுமத்தின் பிரதிநிதிகள் முன்னிலையில் இரு நிறுவனங்களுக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.